லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-09 இதழ்-03 ஆகஸ்ட் - 2020 மாத இதழ் விலை ₹ 10

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INDIA
ISSN : 2582-5275



# இ பாஸ் தளர்வு தொழில் வளர்ச்சி அடையுமா?

makkalvisaranai




# வள்ளலார் அருளிய

# கல்ப மருந்து


## பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்





- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில் ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்
- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
- கபம் ■ காசம் ■ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ■ பித்தம்

போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்

அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.

எண்.2/9, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்

"அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்"

## புதிய திருத்தங்கள்

பருவநிலை மாறுதல்கள் உண்டாக்கி வரும் சேதங்கள் இன்று வளர்ச்சி தொடர்பான உலகின் பார்வையையே புரட்டிப்போட்டுவரும் நாட்களில், எல்லா நாடுகளிலுமே சூழலோடு இயைந்த தொழில் கொள்கைக்கான குரல்கள் வலுவடைகின்றன. இந்தியாவிலும் ஏற்கெனவே உள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிமுறைகளே பலவீனமாக இருக்கின்றன; அவை பலப்படுத்தப்பட வேண்டும் என்ற குரல்கள் ஒலித்துவரும் நிலையில், அவற்றை மேலும் நீர்க்கச் செய்யும் விதமாக இருக்கிறது அரசு இப்போது கொண்டுவந்திருக்கும் வரைவு அறிக்கை.

எந்தவொரு திட்டமும் தொடங்கப் படுவதற்கு முன்பு அரசின் சார்பில் அமைக்கப்பட்ட குழுவால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சுற்றுச்சூழல் தாக்கல் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்; அந்த அறிக்கையின் அடிப்படையிலேயே திட்டத்துக்கு அனுமதி அமையும் என்பதே முன்னதாக அமலில் இருக்கும் அறிவிக்கை வலியுறுத்தும் நெறிமுறை. இதில் முக்கியமான அம்சம் மக்களிடம் நடத்தப்படும் கருத்துக்கேட்பு. ஒன்றிய அரசு இப்போது கொண்டுவரவுள்ள திருத்தங்களோ பல பாதகமான அம்சங்களைக் கொண்டிருக்கிறது. அவற்றில் முக்கியமானது மக்கள் கருத்துகேட்பு பலவீனமாக்கப்படுவதாகும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது தேச நலனோடு தொடர்புடைய திட்டங்களுக்குச் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அவசியமில்லை என்பதோடு, மதிப்பீட்டு அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்பே ஒரு திட்டத்தைத் தொடங்கவும் விரிவுபடுத்தவும் இந்தப் புதிய அறிவிக்கை வழிவகுக்கிறது. 'தேசிய நலனோடு தொடர்புடைய திட்டங்கள்' என்ற மறுவகைப் படுத்தலானது சுற்றுச்சூழல் அனுமதியிலிருந்து விலக்களிக்கவே உருவாக்கப்பட்டுள்ளது.

அரசு நினைத்தால் எந்தத் திட்டத்தையும் இந்த வரிசையின் கீழ் கொண்டுவர முடியும்; அதன் அடிப்படையில் பல திட்டங்களை மக்கள் மீது திணிக்க முடியும் என்ற அச்சத்தை எப்படிப் புறந்தள்ள முடியும்? ஆண்டுக்கு இரண்டு முறை சமர்ப்பிக்க வேண்டிய தொழிற்சாலைகளின் செயல்பாடுகள் தொடர்பிலான அறிக்கைகளை ஆண்டுக்கு ஒரு முறை சமர்ப்பித்தால் போதுமானது, சூழலுக்குக் கேடு விளைவிக்கும் தொழிற்சாலைகளுக்கு எதிராக அரசு அமைப்புகள் மட்டுமே வழக்குத் தொடர முடியும் என்பன உள்ளிட்ட புதிய திருத்தங்கள்; மக்கள் கருத்துகேட்புக்கான கால அவகாசம் 20 நாட்களாகக் குறைக்கப்படுவது எல்லாமும் அரசின் மீதான அச்சத்துக்கு வலு சேர்ப்பதாகவே இருக்கின்றன.

தொழில் துறை செயல்பாடுகளின் உடனடிப் பொருளாதாரப் பயன்களைத் தாண்டி, அவை நீடித்த நிலையான வளர்ச்சியாகவும் நாட்டின் இயற்கைச் சூழலை நாசமாக்கிடாததாகவும் இருத்தல் அவசியம். படிப்படியாக அதை நோக்கித்தான் இந்தியா பயணப்பட வேண்டும். அப்படியென்றால், இந்த அறிவிக்கையை அரசு கைவிட வேண்டும். பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில் எதிர்காலத்தை நாசமாக்கிக்கொள்ள முடியாது.

**- ஆசிரியர்**

# ரேடியோ நெட்வொர்க்கை அடிப்படையாகக் கொண்ட கடைசி மைல் தொலைத் தொடர்பு இணைப்பு தீர்வான "பாரத் ஏர்ஃபைபரை"

## திரு. சஞ்சய் தோத்ரே திறந்து வைத்தார்

இந்திய அரசாங்கத்தின் மத்திய மனிதவள மேம்பாட்டு, மின்னணு, தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. சஞ்சய் தோத்ரே, மகாராஷ்டிராவின் அகோலாவில் "பாரத் ஏர் ஃபைபர் சேவைகளை" திறந்து வைத்தார். பாரத் ஏர் ஃபைபர் சேவைகளின் தொடக்கத்துடன், அகோலா & வாஷிம் மாவட்டத்தில் வசிப்பவர்கள் தேவைக்கேற்ப வயர்லெஸ் இணைய இணைப்புகளைப் பெறுவார்கள்.

இந்திய அரசால் முன்னெடுக்கப்பட்ட டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக பாரத் ஏர் ஃபைபர் சேவைகளை பிஎஸ்என்எல் (BSNL) அறிமுகப்படுத்தியுள்ளது, இந்தச் சேவை பிஎஸ்என்எல் (BSNL) இருப்பிடங்களிலிருந்து 20 கிமீ தூரத்தில் வயர்லெஸ் இணைப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, டெலிகாம் உள்கட்டமைப்புக் கூட்டாளர்களின் (TIPs) ஆதரவுடன் மலிவான சேவைகளுடன் வருவதால், தொலைதூர இடங்களில் உள்ள BSNL வாடிக்கையாளர்களும் பயனடைவார்கள்.

அகோலா மற்றும் வாஷிம் மாவட்டத்தைச் சேர்ந்த பிஎஸ்என்எல்லின் உள்ளூர் வணிகப் பயனாளிகள் மூலம் பிஎஸ்என்எல் "பாரத் ஏர் ஃபைபர் சேவைகளை" வழங்குகிறது, மேலும் இந்தச் சேவைகள் சரியான இணைய இணைப்பை விரைவான நேரத்தில் வழங்கும். பிஎஸ்என்எல் வரம்பற்ற இலவசக் குரல் அழைப்பை வழங்குவதால் இந்தச் சேவைகள் பிற ஆபரேட்டர்களிடமிருந்து தனிச்சிறப்பானது என்பதுடன் முற்றிலும் வேறுபட்டவை ஆகும்.

இந்த உயர் தொழில்நுட்பச் சேவைகளுடன் பிஎஸ்என்எல் (BSNL) தனது வாடிக்கையாளர்களை அதிகரிக்கும்




அதே நேரத்தில் பிஎஸ்என்எல் (BSNL) அகோலா மற்றும் வாஷிம் மாவட்டத்தின் உள்ளூர்வாசிகளுக்கு பிஎஸ்என்எல் உடன் டெலிகாம் உள்கட்டமைப்புக் கூட்டாளர்களாகக் கைகோர்க்கவும் இது ஒரு சிறந்த வாய்ப்பை அளிக்கிறது. இதனால் அவர்கள் மாதந்தோறும் சுமார் ஒரு லட்ச ரூபாய் மாத வருமானம் ஈட்டுவதுடன், இதன்மூலம் இந்திய அரசின் "சுயசார்பு இந்தியா" முயற்சிகளின் கீழ் தன்னம்பிக்கை பெறுவார்கள்.

இந்த பாரத் ஏர் ஃபைபர் சேவைகள் விரைவான வயர்லெஸ் இணைய இணைப்பு மற்றும் குரல் சேவைகளின் புதிய வழியை நியாயமான செலவில் தருகிறது. பி.எஸ்.என். எல் 100 எம்.பி.பி.எஸ் வேகம் வரை "பாரத் ஏர் ஃபைபர்" இணைப்பை வழங்குகிறது. பிஎஸ்என்எல் வயர்லைன் மற்றும் வயர்லெஸ் பிரிவுகளில் கவர்ச்சிகரமான பிராட்பேண்ட் திட்டங்களை வழங்குவதுடன், ஊரடங்கின் போது, அரசு மற்றும் பல தனியார்



நிறுவனங்களால் தொடங்கப்பட்ட வீட்டிலிருந்து வேலையை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு தேவையான இணைய இணைப்பை வழங்கியதன் மூலம் பிஎஸ்என்எல் மிகவும் நம்பகமான பிராண்டாகவும் செயல்பட்டது.

லேண்ட்லைன் / பிராட்பேண்ட் மற்றும் ஃபைபர் FTTH இணைப்புகளை பிஎஸ்என்எல் வெற்றிகரமாக வழங்குகிறது. ஜூலை மாதம் 20ஆம் தேதி முதல், பி.எஸ்.என். எல் மகாராஷ்டிரா வட்டத்தில் 15000 FTTH இணைப்புகளையும், இந்தியா முழுவதும் 162000 FTTH இணைப்புகளையும் வழங்கியுள்ளது. கோவிட் -19 தொற்றுநோயின் காரணமாக கடுமையான ஊரடங்கு அமல்படுத்தப்பட்டிருந்த நேரத்தில் இவை அற்புதமான சாதனைகள்.

வயர்லெஸ் பாரத் ஏர் ஃபைபர் அறிமுகப்படுத்தப்படுவதால், மிக விரைவான நேரத்தில் தேவைக்கேற்ப கூடுதல் இணைப்புகள் வழங்கப்படும். அகோலா & வாஷிம் மாவட்டத்தில் வசிக்கும் அனைவரும், இந்த தரமான மற்றும் மிகவும் விலை மலிவான சேவைகளைப் பெற்று பயனடைய பிஎஸ்என்எல் வேண்டுகோள் விடுக்கிறது. - PIB

- S. சுப்ரமணியன்


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

மக்கள் விசாரணை®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-09 இதழ்-03 ஆகஸ்ட் - 2020

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
**V.அருணாச்சலம், S.அனந்த கிருஷ்ணன்,** M.A., **A.முருகையன்,**

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்,** B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்: **வீ.சிவசங்கர்,** B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்
V.தாயுமானவன், ரூபன் பிரசாந்த்

**முதன்மை செய்தியாளர்கள்**
A.N.சேதுராமன் சென்னை, M.முருகம்மாள் திருப்பத்தூர்
P.தாமோதரன் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
S.செந்தில்குமார், குருபாலகிருஷ்ணன், R.ஜெயா சென்னை
A.D.ராஜேந்திரன் விழுப்புரம், A.பாலகிருஷ்ணன் கோவை
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, S.மோகன்

**நிருபர்கள்**
P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன்
S.ஏழுமலை, M.நிவேதிதா, N.சீனிவாசன்
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ்
சச்சின், B.நாராயணசாமி, C. அன்பழகன்
G.ராஜேஷ்கண்ணா, R.பார்த்தசாரதி
G.ஆனந்த்குமார், R. சத்தியமூர்த்தி
M.முருகன், M.சரவணன், V.முருகன் கோவை

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M. அருணாச்சலம்**


இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்

**மக்கள் விசாரணை**

எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# கண் புரையை அறுவைச் சிகிச்சை இல்லாமல் தடுக்கும் எளிய செலவு குறைவான முறையை ஐஎன்எஸ்டி விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்




கண்புரை என்பது பார்வைக் குறைபாட்டின் முக்கிய அம்சமாக உள்ளது. நமது கண்களின் லென்சுகளைப் பாதிக்கக்கூடிய கிரிஸ்டலின் புரதங்கள் பரவும்போது, அவை பெருகி, ஏற்படும் பால் ஊதா அல்லது பழுப்பு நிற படலம் கண் புரை எனப்படும். இது கடைசியாக லென்சுகளின் ஒளியைப் பாதிக்கும். எனவே, இந்தப் படலம் உருவாவதைத் தடுப்பது, ஆரம்ப கட்டத்திலேயே அதை அகற்றுவது, கண் புரை நோய்க்கான முக்கிய சிகிச்சை உத்தியாகும். இதனை நடைமுறைப்படுத்தும் முறைகள், கண் புரையை கட்டுபடியான செலவில் தடுப்பதுடன், எளிதில் அணுகும் சிகிச்சையாகவும் இருக்கும்.

மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறையின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனமான நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் விஞ்ஞானிகள் குழு, வலியைக் குறைக்கவும், காய்ச்சல் அல்லது அழற்சிக்கு அதிகமாகப் பயன்படுத்தக் கூடியதுமான, நான்ஸ்டீராய்டல் அழற்சி எதிர்ப்பு மருந்தான ஆஸ்பிரினில் இருந்து நானோகம்பிகளை உருவாக்கியுள்ளனர். இது கண்புரை நோய்க்கு சிறந்த சிறிய மூலக்கூறு அடிப்படையிலான நானோசிகிச்சையாக கண்டறியப்பட்டுள்ளது.

கண்புரை நோய் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை ஆகியவற்றுக்கு அதிக செலவாகும் என்பதால், அவற்றை அணுக முடியாத வளரும் நாடுகளைச் சேர்ந்த நோயாளிகளுக்கு, அறுவைச் சிகிச்சையற்ற, செலவு குறைவான இந்தச் சிகிச்சை முறை பெரிதும் பயன்படும்.

மேலும் விவரங்களுக்கு, டாக்டர் ஜிபன் ஜோதி பாண்ட்யா-வை (jyoti@inst.ac.in) தொடர்பு கொள்ளலாம்.

- K. ரமேஷ்குமார்

# இ பாஸ் தளர்வு தொழில் வளர்ச்சி அடையுமா?




கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக, பல்வேறு கட்டுப்பாடுகள், தளர்வுகளுடன் தமிழகத்தில் அமல்படுத்தப்பட்டுள்ள பொதுமுடக்கத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீட்டித்து (ஆகஸ்ட் 31 வரை) தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி அண்மையில் உத்தரவிட்டிருந்தார்.

ஆகஸ்ட் ஒன்றாம் தேதி முதல் பொதுபோக்குவரத்து தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், பொதுமுடக்கத்தை தமிழக அரசு மேலும் ஒரு மாதம் நீட்டித்துள்ளது. இதன் விளைவாக, பொதுமக்கள் தங்களது பயணத்துக்கு இபாஸ் வாங்க வேண்டிய நடைமுறையும் தொடர்கிறது.

ஆனால், இபாஸ் விண்ணப்பிப்பவர்களுக்கு அவ்வளவு எளிதில் அது கிடைக்காத நிலையில், ஆயிரக்கணக்கில் லஞ்சம் கொடுத்து இபாஸ் பெறும் முறைகேடு தொடர்வதாக பொதுமக்கள் மத்தியில் பரவலாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அவசர மருத்துவ தேவைகள், மரணம் உள்ளிட்ட காரணங்களுக்காக பொதுமக்களுக்கு இபாஸ் வழங்க, மாவட்டந்தோறும் ஆட்சியர் அலுவலகத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது முதல்வர் அறிவித்துள்ளதையடுத்து, இபாஸ் வழங்க விரைவில் மாவட்டந்தோறும் தலா ஒரு குழு கூடுதலாக அமைக்கப்படவுள்ளது. தமிழகத்தில் உள்ள சிறு, குறு தொழில் நிறுவனங்கள், தேவைப்பட்டால் வெளி மாநில தொழிலாளர்களை மீண்டும் தங்கள் தொழிற்சாலைகளில் பணிபுரிய அழைத்து வரலாம்“ என்று முதல்வர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது ஒருபக்கமிருக்க, இத்தனை நாள்களாக இ-பாஸுக்கு விண்ணப்பித்து, அது கிடைக்காமல் காத்திருந்த ஒரு கூட்டம். இன்று விண்ணப்பித்து, ஒட்டு மொத்தமாகக் கிளம்பிவிட்டது. அதனால், தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கடந்த 150 நாள்களாக இல்லாத அளவுக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இப்படி ஒரு வழிமுறையை அரசு ஏன் பின்பற்றுகிறது என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவரிடம் பேசியபோது, “மக்களின் தேவைக்காகவே இ-பாஸ் நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. அவசர காரணங்கள் இல்லாமல் யாரும் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று அரசு வலியுறுத்தியுள்ளது. அதோடு, தவறான தகவல்கள் கொடுத்து இ-பாஸ் பெற முயன்றால் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடைமுறை அமலில் இருப்பதற்கான முக்கிய காரணமே ஓர் ஊர் விட்டு இன்னோர் ஊருக்குச் செல்வோரின் விவரங்கள் சேகரிக்கப்படும். நோய்ப் பரவல் கட்டுப்பாட்டு நடவடிக்கையாகவே இதைப் பார்க்கவேண்டும்“ என்று கூறினார்.

– ஆசிரியர்



முனைவர் **ஆ.மவுரியன்**
எழுதும்



வீரத்தமிழச்சிகளின் வரலாறு

தொடர் 33

# அன்னை மீனாம்பாள்

**பெண் விடுதலைக்காகவும், பட்டியலின மக்கள் விடுதலைக்காகவும் போராடுவததைத் தன் வாழ்நாள் லட்சியமாகக் கருதினார்**

மீனாம்பாள், பிள்ளை சமுதாயத்திலிருந்து சென்னை மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட முதல் பிரதிநிதியான வாசுதேவப்பிள்ளையின் மகள். முதன் முதல் கப்பலோட்டிய தமிழர் என்று புகழப்பட்டவரும், கோடீஸ்வரப்பிள்ளை என்று அழைக்கப்பட்டவருமான மதுரைப்பிள்ளையின் பேத்தி. இவர் அக்காலத்தில் ரங்கூனில் மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்தவர். அக்காலத்திலேயே ரங்கூனில் மெட்ரிக்கு லேசன்வரை படித்தவர். இவர் தனது 16வது வயதில் 1918இல் பட்டியலின இயக்கத் தலைவர் ந. சிவராஜ் என்பவரை மணந்து கொண்டார்.

பர்மாவின் தலைநகர் ரங்கூனில் 1904-ம் ஆண்டு, டிசம்பர் 26 அன்று வி.ஜி.வாசுதேவப் பிள்ளை, மீனாட்சி தம்பதியின் மகளாகப் பிறந்தார் மீனாம்பாள். இவரது தந்தை பர்மாவில் வணிகம் செய்துவந்தார். இவர் மூன்று முறை சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகவும் 1923-ம் ஆண்டு முதல் 1926-ம் ஆண்டு வரை மதராஸ் மாகாண சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார். மாகாணத்தின் முதல் பட்டியலின சட்டமன்ற உறுப்பினர் இவரே. 1900-ம் ஆண்டு ரங்கூனில் மதுரைப்பிள்ளை உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கி நடத்திவந்தார் வாசுதேவன். தந்தை தோற்றுவித்த பள்ளியிலேயே படித்துத் தேறினார் மீனாம்பாள். ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, இந்தி எனப் பல மொழிகள் பேசவும் எழுதவும் கற்றுத் தேர்ந்தார். 1917-ம் ஆண்டு, ரங்கூன் கல்லூரியில் நுண்கலைக் கற்றுத் தேர்ந்தார் மீனாம்பாள்.

1918 ஜூலை 10 அன்று மீனாம்பாளின் திருமணம், சென்னையைச் சேர்ந்த சட்டக்கல்லூரி மாணவரான சிவ ராஜுடன் நடைபெற்றது. 16 வயதான சுட்டிப்பெண் நாடுவிட்டு நாடு என்று பெரும் மாற்றம். வாழ்க்கை முறையில் எதுவும் மாற்றமில்லை. சிவராஜ் பெரும் புரட்சியாளர். ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தொடர்ச்சியாகக் குரல்கொடுத்து வந்தார். தந்தை வீட்டில் இருந்த அதே விடுதலை உணர்வும் சூழலும் கிடைக்க, மீனாம்பாளுக்குக் குடும்ப வாழ்க்கை மகிழ்வாகவே இருந்தது. தம்பதிக்கு கல்யாணி, தயாசங்கர், பத்மினி, போதிசந்தர் என நான்கு குழந்தைகள் பிறந்தனர். 1925-ம் ஆண்டு, சட்டக்கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியைத் தொடங்கிய சிவராஜ், பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். 1926-ம் ஆண்டு தேர்தலில் நீதிக்கட்சியின் சார்பாகப்



போட்டியிட்டு ஜெயித்து மதராஸ் மாகாண சட்ட மேலவை உறுப்பினரானார் சிவராஜ். 10 ஆண்டுகள் அந்தப் பதவியில் நீடித்தார்.

*1928*-ம் ஆண்டு, சைமன் கமிஷன் இந்தியா வரப்போகிறது என்றதும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துக் களமிறங்கியது காங்கிரஸ். அந்த இயக்கத்தில் சில உயர்சாதித் தலைவர்களின் போக்கு, ஒடுக்கப்பட்ட மக்களின் வளர்ச்சிக்கு எதிரானது என்று நினைத்தார் மீனாம்பாள். ஆங்கிலேயரின் சட்டங்களைத் திருத்த அமைந்த வாய்ப்பான சைமன் கமிஷனை ஏன் எதிர்க்க வேண்டும், அதனால் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் என்றால், ஏன் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு சைமன் கமிஷனை ஆதரித்து மேடைகளில் பேசத்தொடங்கினார்.

அம்பேத்கர், பெரியார், நேரு, ஜின்னா என்று இந்தியாவின் அன்றைய தலைவர்கள் அனைவருடனும் இணக்கமான நட்பு தம்பதிக்கு இருந்தது. 'என் தங்கை மீனாம்பாள்' என்று பாபா சாகிப் அம்பேத்கரும், தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் அழைக்கும் அளவுக்கு மக்கள் பணியாற்றி வந்தார் மீனாம்பாள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை முதன்முதலில் முன்னெடுத்தப் பெண்களில் மீனாம்பாள் குறிப்பிடவேண்டியவர்.

கௌரவ நீதிபதி, சென்னை மாநகராட்சி கவுன்சிலர், திரைப்படத் தணிக்கைக்குழு உறுப்பினர், சென்னை மாகாண ஆலோசனைக் குழு உறுப்பினர், தொழிலாளர் டிரிப்யூன் உறுப்பினர், சென்னை நகர ரேஷன் ஆலோசனைக்குழு உறுப்பினர், சென்னைப் பல்கலைக்கழக செனட் உறுப்பினர், போருக்குப் பின்னான புனரமைப்புக் குழு உறுப்பினர், எஸ்.பி.சி.ஏ உறுப்பினர், நெல்லிக்குப்பம் பாரி நிறுவனத் தொழிலாளர் சங்கத் தலைவர், தாழ்த்தப்பட்டோர் கூட்டுறவு வங்கி இயக்குநர், அண்ணாமலை பல்கலைக்கழக செனட் உறுப்பினர், சென்னை கூட்டுறவு வீட்டுவசதி சங்க இயக்குநர், விடுதலைபெற்ற கைதிகள் நலச்சங்க உறுப்பினர், காந்திநகர் மகளிர் சங்கத் தலைவர், மகளிர் தொழில் கூட்டுறவுக் குழுத் தலைவர், சென்னை அரசு மருத்துவமனைகளின் ஆலோசனைக்குழு உறுப்பினர், லேடி வில்லிங்டன் கல்லூரி தேர்வுக்குழுத் தலைவர்ஞ் இத்தனை பதவிகளையும் பல்வேறு ஆண்டுகளில் திறம்பட நிர்வகித்துக்கொண்டே குடும்பத்தையும் கட்டிக்காத்தவர் மீனாம்பாள். இவரது குடும்பம் முழுக்க ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகள், மருத்துவர்கள்!

"மாமியின் வீட்டில் எப்போதும் உறவினர்களுக்குப் பஞ்சம் இருக்காது" என்று சிரித்துக் கொண்டே சொல்கிறார் மீனாம்பாளின் கடைக் குட்டி மருமகளான பிரபல சரும நோய் மருத்துவர் சுலோச்சனா போதிசந்தர். "நான் தூரத்து உறவு என்பதால் சிறுவயது முதலே மாமியைக் கவனித்திருக்கிறேன். அன்பும் அரவணைப்பும் கொண்டவர். அதேநேரம் எடுக்கும் நிலைப்பாட்டில் கொஞ்சமும் தளராதவர். வாசிப்பு அவருக்கு மிகப்பிடித்த பொழுதுபோக்கு.

**தொடரும்**

# ஸ்ரீராம ஜன்மபூமி மந்திரில் பிரதமர் பூமி பூஜை நடத்தினார்

## பரஸ்பர அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் அடிப்படையில் கோவில் கட்டப்பட வேண்டும்: பிரதமர்

**இந்தியாவின் பெருமைக்குரிய அத்தியாயம்**

நிகழ்ச்சியின் போது பேசிய பிரதமர், இந்தப் புனிதமான தருணத்தில் நாட்டு மக்களுக்கும், உலகெங்கும் உள்ள ராம பக்தர்களுக்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார். இது வரலாற்று முக்கியத்துவமான நிகழ்வு என்று குறிப்பிட்ட அவர், இந்தியாவில் இன்றைக்குப் பெருமைக்குரிய ஒரு சகாப்தம் தொடங்கியுள்ளதாகக் கூறினார். பல நூற்றாண்டுகள் காத்திருப்புக்குப் பிறகு, இறுதியில் லட்சியத்தை எட்டியது குறித்து நாடு முழுவதிலும் உள்ள மக்கள் உணர்ச்சிப் பெருக்குடன், மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார். தங்கள் வாழ்நாளில் இந்த நிகழ்வு நடப்பதை சிலரால் நம்ப முடியவில்லை. உடைப்பு, மறுபடி கட்டுவது என்ற சுழற்சிகளில் இருந்து ராம் ஜன்மபூமி விடுதலை பெற்றுள்ளது என்றும், கூடாரங்கள் இருந்த இடத்தில் இப்போது பிரமாண்டமான ராம்லாலா கோவில் கட்டப்படுகிறது என்றும் கூறினார்.

சுதந்திரப் போராட்டத்தில் நாடு முழுக்க பலரும் செய்த தியாகங்களை நினைவுகூர்வதாக ஆகஸ்ட் 15ஆம் தேதி இருப்பதைப் போல, ராம் மந்திருக்காக பல தலைமுறைகளாகத் தொடர்ந்து நடந்த போராட்டங்கள் மற்றும் தீவிர அர்ப்பணிப்புகளின் அடையாளமாக இன்றைய நாள் இருக்கும் என்று பிரதமர் தெரிவித்தார். ராம் மந்திர் என்ற கனவை நனவாக்குவதற்காகப் போராடிய அனைவரின் பங்களிப்பையும் பிரதமர் நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தினார்.

**ஸ்ரீராம் - நமது கலாச்சாரத்தின் அடித்தளம்**

ஸ்ரீராமரின் இருப்பையே பலர் கேள்விக்கு உள்ளாக்கிய நிலையில், நமது கலாச்சாரத்தின் அடித்தளமாக ஸ்ரீராமர் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறார். நமது கலாச்சாரம், காலவரையறைகளைக் கடந்த நம்பிக்கை, தேசிய உணர்வு, கூட்டு மன உறுதி ஆகியவற்றின் நவீன அடையாளமாக ராம் மந்திர் இருந்து அடுத்து வரும் தலைமுறைகளுக்கு உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் கூறினார். பல்வேறு துறைகளில் ஏராளமான வாய்ப்புகளை உருவாக்குவதாகவும், அந்தப் பிராந்தியத்தின் பொருளாதார நிலையை மாற்றக்கூடியதாகவும் இந்தக் கோவில் உருவாக்கும் பணி அமையும் என்று அவர் தெரிவித்தார்.



கோடிக்கணக்கான ராம பக்தர்களின் நம்பிக்கைக்கும், உறுதிக்கும் கிடைத்த வெற்றியின் சாட்சியாக இந்த நாள் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். கடந்த ஆண்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தபோது, அனைவருடைய உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில், அனைத்துத் தரப்பு மக்களும் காட்டிய கண்ணியம் மற்றும் கட்டுப்பாட்டு உணர்வுகளுக்கு அவர் பாராட்டு தெரிவித்தார். அதேபோன்ற கண்ணியமும், கட்டுப்பாடும் இன்றைக்கும் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீராமரின் வெற்றி, கோவர்த்தன மலையை தூக்கிய ஸ்ரீகிருஷ்ணர், சத்ரபதி சிவாஜி சுயராஜ்யத்தை ஏற்படுத்தியது, சுதந்திரப் போராட்டத்தை காந்திஜி முன்னின்று நடத்தியது போன்ற சிறப்புக்குரிய விஷயங்களில், ஏழைகள், பிற்படுத்தப்பட்டோர், தலித்கள், மலைவாழ் மக்கள் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் முக்கியமான பங்கு வகித்துள்ளனர் என்பதை பிரதமர் நினைவுகூர்ந்தார். அதேபோல சாதாரண குடிமக்களின் உதவியுடனும், பங்களிப்புடனும் ராம் மந்திர் கட்டும் பணி தொடங்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீராமரின் சிறப்பு குணங்கள் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், எப்போதும் உண்மையின் பக்கமாக ஸ்ரீராமர் நின்றார் என்றும், தனது ஆட்சியில் சமூக நல்லிணக்கத்துக்கு முக்கியத்துவம் அளித்தார் என்றும் தெரிவித்தார். தன் ஆட்சியில் அனைத்து உயிர்களையும் சமமாக மதித்தார். ஏழைகள், உதவி தேவைப்படுவோர் மீது விசேஷமான அன்பு காட்டினார். ஸ்ரீராமரின் வாழ்வில் நமக்கு உத்வேகம் தராத செயல்பாடு எதுவுமே கிடையாது. நாட்டின் கலாச்சாரம்,



தத்துவம், நம்பிக்கை மற்றும் பாரம்பரியத்தின் பல அம்சங்களில் அவருடைய தாக்கத்தைக் காண முடிகிறது என்றும் பிரதமர் கூறினார்.

### ஸ்ரீராமர்- வேற்றுமையில் ஒற்றுமை காணும் இழை

பண்டைக்காலத்தில் வால்மீகி ராமாயணத்தின் மூலமும், அதன் பின்னர் இடைக்காலத்தில், துளசிதாசர், கபீர், குருநானக் ஆகியோர் மூலமாகவும், அகிம்சை, சத்தியாகிரகம் ஆகியவற்றின் சக்தியாகத் திகழ்ந்த மகாத்மா காந்தியடிகளின் பஜனைகளிலும், ஸ்ரீராமர் மக்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காகத் திகழ்ந்தார் என பிரதமர் கூறினார். ஸ்ரீராமருடன், புத்த பகவானும் தொடர்புடையவர் ஆவார். அயோத்தி நகரம், பல நூற்றாண்டுகளாக சமணர்களின் நம்பிக்கை மையமாக இருந்து வந்தது என அவர் கூறினார். ராமாயணம் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டதைச் சுட்டிக்காட்டிய பிரதமர், நாட்டில் வேற்றுமையில் ஒற்றுமை என்ற வகையில், அதனை இணைக்கும் பொது நூலாக ஸ்ரீராமர் இருக்கிறார் என்றார்.

பல்வேறு நாடுகளில் ஸ்ரீராமர் மதிக்கப் படுவதாக பிரதமர் கூறினார். அதிக அளவில் இஸ்லாமியர்களைக் கொண்ட நாடான இந்தோனேசியா மற்றும் கம்போடியா, லாவோஸ், மலேசியா, தாய்லாந்து, இலங்கை, நேபாளம் ஆகிய நாடுகளில் ராமாயணம் புகழ் பெற்று விளங்குவதாக பிரதமர் பட்டியலிட்டார். ஸ்ரீராமரைப் பற்றிய குறிப்புகள் ஈரான், சீனா ஆகிய நாடுகளில் காணப்படுவதாகத் தெரிவித்தார். இதேபோல, ராமர் கதை பல்வேறு நாடுகளில் வழங்கப்படுவதாக அவர் கூறினார். இந்த அனைத்து நாடுகளையும் சேர்ந்த மக்கள் ராமர் கோவில் கட்டுமானம் இன்று துவங்குவது குறித்து மகிழ்ச்சியாக உணருவார்கள் என அவர் கூறினார்.

### மனித குலம் முழுவதற்கும் உத்வேகம்

இந்தக் கோவில் இனி வரும் பல காலங்களுக்கும், மனித குலம் முழுவதற்கும் உத்வேகத்தை அளிக்கும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார். ஸ்ரீராமர், ராமர் கோவில், நமது பன்னெடுங்காலப் பாரம்பரியம் ஆகியவை குறித்த செய்திகள் உலகம் முழுவதையும் எட்டியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

### ராம ராஜ்யம்

மகாத்மா காந்தி கனவு கண்ட ராம ராஜ்யத்தின் வரம்புகள் குறித்து பிரதமர் நினைவு கூர்ந்தார். எவரும் ஏழையாகவோ, மகிழ்ச்சியற்றவராகவோ இருக்கக்கூடாது; ஆண்களும், பெண்களும் சரிசமமான மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும்; விவசாயிகளும், விலங்குகளைப் பாதுகாப்பவர்களும் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும்; வயதானவர்கள், குழந்தைகள், மருத்துவர்கள் ஆகியோர் பாதுகாக்கப்பட வேண்டும்; தஞ்சம் புகுந்தவர்களைக் காப்பது அனைவரின் கடமை; தாய்நாடு சொர்க்கத்தை விட மேலானது; ஒரு நாட்டின் அதிக ஆற்றல், மென்மேலும் அமைதியை நிலைநாட்டுவது என்பன உள்ளிட்ட ஸ்ரீராமரின் போதனைகள் நாட்டை தொடர்ந்து வழிநடத்தி வருகின்றன என அவர் கூறினார். ஸ்ரீராமர் நவீனத்துவத்துக்கும், மாற்றத்துக்கும் உதாரணமாகத் திகழ்கிறார் என்று கூறிய பிரதமர், ஸ்ரீராமரின் இந்த லட்சியங்களைப் பின்பற்றி, நாடு முன்னேறி வருவதாகக் குறிப்பிட்டார்.

### பரஸ்பர அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் அடிப்படை

பரஸ்பர அன்பு மற்றும் சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, அதன் மீது கோவில் கட்டப்பட வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார். அனைவருக்காகவும், அனைவரும் இணைந்து, தன்னம்பிக்கையுடன், தற்சார்பு இந்தியா மூலமாக அனைவரது வளர்ச்சியை நாம் எட்டுவது அவசியம் என்று அவர் கூறினார். எந்த தாமதமும் இல்லாமல் நாம் முன்னேறிச் செல்ல வேண்டும் என்ற ஸ்ரீராமரின் ஆசியுடன் நாடு அதனை பின்பற்றிச் செல்வது அவசியம் என அவர் வலியுறுத்தினார்.

### கோவிட் காலத்தில் ‘மரியாதை’

கோவிட் சூழலில், ஸ்ரீராமரின் ‘மரியாதை’ வழியின் முக்கியத்துவத்தை நினைவு கூர்ந்த பிரதமர், தற்போதைய காலச்சூழல், ‘இருவருக்கும் இடையே கஜ தூரம்’, ‘முகக்கவசம் அவசியம்’ என்பதை வலியுறுத்துகிறது என்று கூறினார். இதை ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

***- வீ. சிவசங்கர்***

# வள்ளலார் அருளிய

# காயகல்பம்

Dr. K. ராஜமாணிக்கம்

ஆடு தீண்டாப்பாளை பெயரை கேட்டதும் ஆடு இந்த செடியை உணவுக்காக கடிக்காது என்பதும் அதனாலயே இந்த பெயர் ஏற்பட்டதும் விளங்கும். தரையில் படர்ந்து வளரும் செடியின் இலைகளின் மேல் வெள்ளை பூச்சுடன் காணப்படும். தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் விளையக்கூடியது.

ஆடுதீண்டாப்பாளை, ஆடுதொடப்பாளை பங்கம்பாளை என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும். ஆடுதீண்டாப்பாளையை முறையாக பயன்படுத்தினால் குடற்புழு, சிலந்தி பூச்சிகடிகளின் நஞ்சுகள், கரும்படை, கரப்பான் 80 வகை வாதநோய்கள் குணமாகும். சில பெண்களுக்கு பத்து மாதம் ஆகியும் குழந்தை பிறப்பின் வலி எடுக்காமல் கடும் வேதனையுடன் முறையற்ற வலி உண்டாகும். வேதனையில் துடிக்கும் நிலை உண்டாகும். அவர்களுக்கு இதன் வேரை சூரணமாக்கி அதில் பத்து கிராம் அளவில் வெந்நீரில் கொடுக்க வேதனை தீரும் வகையில் குழந்தை பிறப்பு உண்டாகும்.

எந்த பாம்பு கடித்தது என்று தெரியாமல் பாம்பு கடி ஏற்பட்டால் இதன் வேரை அரைத்து காலை வெறும் வயிற்றில் ஐந்து நாட்கள் தொடர்ந்து கொடுத்தால் மூன்று நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டால் எல்லாவிதமான பாம்பு கடிகளும் நீங்கும்.



மருந்து சாப்பிடும் காலத்தில் 24மணிநேரம் தூங்காமல் இருந்து புதுப்பாளையில் உப்பில்லாத பச்சரிசியை பொங்கி சாப்பிட வேண்டும். பெண்கள் வயிற்றில் உள்ள கருப்பை கோளாறு காரணமாக குழந்தை பிறப்பில் பாதிப்பு ஏற்படும். பெண்கள் ஆடுதீண்டாப்பாளையின் விதைகளை சூரணம் செய்து ஐந்து கிராம் எடுத்து கையளவு சிற்றாமணக்கெண்ணெயில் கொடுக்க பேதியாகும். மாதம் ஒரு முறை என மூன்று மாதம் கொடுக்க அதன் பிறகு கரு ஏற்படும். பெண்களின் வயது உடல் தன்மை அறிந்து கொடுக்க வேண்டும்.

உடல் வலுப்பெற ஆடுதீண்டாப் பாளை இலையை காயவைத்து பொடியாக்கி (2 ஸ்பூன்) எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு ஒரு செம்பு நீரை ஊற்றி ஒரு டம்ளராக சுண்டவைத்து கஷாயமாக்கி வடிகட்டி அருந்தி வந்தால் உடல் வலுப்பெறும். வயிற்றுப் பூச்சிகள் ஒழிய ஆடுதீண்டாப் பாளையை நிழலில் உலர்த்தி நன்றாக பொடி செய்து வைத்துக் கொண்டு (1ஸ்பூன்) அளவு எடுத்து அதில் தேன் கலந்து கொடுத்து இரவு படுக்கப்போகும் முன் கொடுத்து வந்தால் வயிற்றுப் பூச்சிகள் விரைவில்

நீங்கும்.தலைமுடி உதிர்வை தடுக்க ஆடுதீண்டாப் பாளை இலைகளை எடுத்து நிழலில் உலர்த்தி பொடியாக்கி சீயக்காய் தூளுடன் கலந்து வைத்துக் கொண்டு தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் முடி கொட்டுவது உடனே நிற்கும். மாதவிடாய் வயிற்று வலி, ஒழுங்கற்ற இரத்தப்போக்கு சீராக ஆடுதீண்டாப்பாளை இலைகள் (5) எடுத்து பாத்திரத்தில் போட்டு ஒரு செம்பு தண்ணீரை ஊற்றி ஒரு டம்ளராக சுண்டவைத்து கஷாயமாக்கி ஒருவேளை குடித்து வந்தால் மாதவிடாய் வயிற்று வலி, ஒழுங்கற்ற இரத்தப்போக்கு பிரச்சனைகள் தீரும். ஆடுதீண்டாப் பாளையை அரைத்து (10 மி.லி) அளவு சாறு எடுத்து காலை மாலை என இருவேளையும் குடித்துவந்தால் ஒழுங்கற்ற மாதவிடாய் சீராகும். விட்டுவிட்டுவரும் காய்ச்சல் குணமாகும். ஆரோக்கியமான சுகப்பிரசவம் பெற ஆடுதீண்டாப்பாளை வேர் (2 கிராம்) எடுத்து பொடி செய்து தினந்தோறும் ஒரு டம்ளர் சுடுநீரில் கலந்து ஒரு வேளை குடித்து வந்தால் ஆரோக்கியமான சுகப் பிரசவம் ஏற்படும்.

பெண்களுக்கு ஏற்படும் முக்கியமான பிரச்சனை முறையற்ற மாதவிடாய். இதனால் மனஉளைச்சலும் சில பெண்களுக்கு ஏற்படும். இவர்கள் ஆடுதீண்டாப்பாளையின் இலைச்சாற்றை காலை மாலை பத்து மிலி அளவில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் நாளடைவில் மாதவிடாய் ஒழுங்காகும். விதைச்சூரணம் ஐந்து கிராம் விளக்கெண்ணெயில் சாப்பிட மலத்தில் கலந்துள்ள கிருமிகள் பேதியாகி நீங்கும். முறைக்காய்ச்சல் தணியும். ஆடுதீண்டாப்பாளையின் முழுச்செடியின் சாற்றில் அதே அளவு நல்லெண்ணெய் கலந்து பக்குவமாய் காய்ச்சி எடுத்து



வடிகட்டி கொள்ளவேண்டும். அதை உடலில் ஏற்படும் கரும்படையில் பூச அவை நீங்கி குணம் ஏற்படும். பாம்பு கடித்து விட்டால் இலைச்சூரணத்தை இரண்டு கிராம் அளவில் கொடுக்க விஷம் நீங்கும்.

இந்த சூரணத்தை கொடுத்து வந்தால் யானை தோல் சொறி என்ற தோல் நோய் நீங்கும். சிலருக்கு முகம் கை கால்களில் கருமை படர்ந்து இருக்கும். இதை கருங்குட்டம் என்பார்கள் இவர்கள் காலை வேளையில் இலைச்சூரணத்தை இரண்டு கிராம் அளவில் வெந்நீரில் கலந்து குடிக்க கருங்குட்டம் குணமாகும். கிரந்திகரப் பன் வெக்கை கேசருவி மாந்தை யரந்தை விளையை யறுக்கும் துறந்து பிரியொணா நோய்களையும் பின்முன்பா ராமல்ம றியுணா மூலியடை வாய் ஆடுதொடப்பாளைக் சுகக்கிருமி வன் சிலந்தி நீடுகளுங் குட்டம் நிறை கரைப்பான் ஆடிடச்செய் என்பது வாய்வும் இகல்குட்ட முந்தீரும் திண்பெறுதற் றாது வுமாரு செய்ய என்கிறார் அகத்தியர் பெருமான்.

ஆடே தீண்டாத செடி என்றாலும் அதை ஆராய்ந்து அதன் தனித்தன்மையும் அறிந்து நாம் நலமாக வாழ்வதற்கு வகுத்த முறைகளை பயன்படுத்தி தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி நலமுடன் வாழ்வோம்.

- தொடரும்

# பட்டியலின, பழங்குடியின இளையோருக்கு சுருக்கெழுத்துப் பயிற்சி



பட்டியலினம் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களுக்கு, 27-வது கட்ட சிறப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் சுருக்கெழுத்துப் பயிற்சியை சென்னையில் உள்ள, பட்டியலினம் மற்றும் பழங்குடியினத்தவர்களுக்கான தேசிய தொழிற்பயிற்சி மையம் ஏற்பாடு செய்துள்ளது. தகுதி உள்ள நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் மூலம் 60 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.


இந்தப் பயிற்சியை அளிக்க விரும்பும் நிறுவனங்களையும் தேசிய தொழில்பயிற்சி மையம் தேர்ந்தெடுக்க உள்ளது. பயிற்சி அளிக்க போதுமான வசதிகள், உள்கட்டமைப்பு, இடவசதி உள்ள நிறுவனங்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்கள், பொது அறிவு, பொது ஆங்கிலம், கணிதத்திறன், சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சு, அடிப்படை கணினி அறிவு ஆகியவற்றில் பயிற்சி அளித்து, தமிழகத்தில் பல்வேறு போட்டித் தேர்வுகளில், பட்டியலினம் மற்றும் பழங்குடியின இளையோரைத் தகுதி பெறச் செய்யும் திறன் படைத்தவைகளாக இருக்க வேண்டும். பயிற்சி அளிக்கும் நிறுவனங்களுக்கு, பயிற்சி பெறும் ஒரு நபருக்கு ரூ.800 வீதம் கட்டணத்தொகையை தேசிய தொழிற்பயிற்சி மையம் வழங்கும்.

பயிற்சி அளிக்க விரும்பும் நிறுவனங்கள் தமது விண்ணப்பங்களை 2020 ஆகஸ்ட் 20-ம் தேதிக்குள், துணை பிராந்திய வேலைவாய்ப்பு அலுவலர், எண்.56, மூன்றாது தளம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் கட்டடம், சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை -600 004 (தொலைபேசி எண் - 80720 95783) என்ற முகவரிக்கு வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

சென்னை பட்டியலின, பழங்குடியினத்தவர்களுக்கான தேசிய தொழிற்பயிற்சி மையத்தின் பிராந்திய வேலைவாய்ப்பு துணை அலுவலர் திரு எஸ் கே சாஹூ வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

- M. சத்தியராஜ்




# அறிவியல், தொழில்நுட்பக் கொள்கையை வரையறுக்க, குரலற்றவர்களின் குரலையும் பதிவு செய்யும் முயற்சி

அறிவியல், தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை வரையறுப்பதற்கு குரல் எழுப்ப முடியாதவர்களும் சமுதாய வானொலி மூலமாக குரல் கொடுக்கும் முயற்சியை, இந்தியா முதன்முறையாக மேற்கொண்டுள்ளது.

மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகத்துடன் இணைந்து மத்திய அறிவியல் தொழில் நுட்பத்துறை, அறிவியல் தொழில்நுட்பம் புதுமைக்கொள்கை (எஸ் டி ஐ பி 2020) கொள்கையை வரையறுப்பதற்கான முயற்சியை மேற்கொண் டுள்ளது. அடிமட்ட நிலையில் உள்ளவர்களும், தங்களது கருத்துக்களைப் பதிவு செய்யும் வகையில், அனைவரின் கருத்துக்களையும் உள்ளடக்கியதாகக் கொண்ட வழிமுறைகளுடன் கூடிய, பரவலாக்கப்பட்ட கொள்கை மீது கவனம் செலுத்தப்படும். இந்தக் கொள்கையை வரையறுக்கும் முறை, நான்கு விஷயங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். ஏறத்தாழ 15,000 பங்குதாரர்களின் கருத்துக்களைக் கேட்டறியும். சமுதாய வானொலி மூலமாகவும் கருத்துகள் பதிவு செய்யப்படும். சமுதாய வானொலி நிலையங்கள் மூலமாக அறிவியல் தொழில்நுட்பக் கொள்கை குறித்த மக்களின் பதிவுகளைக் கேட்டறிய, மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறையின், தேசிய அறிவியல் தொழில்நுட்பத் தொடர்புக் கவுன்சில், புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது. நாடு முழுவதும் 291 சமுதாய வானொலி நிலையங்கள் உள்ளன. மண்டலப் பன்முகத்தன்மை, பாலினம், சென்றடையும் திறன் ஆகியவற்றின் அடிப்படை யில் 25 சமுதாய வானொலி நிலையங்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (சி இ எம் சி ஏ) காமன்வெல்த் எஜுகேஷனல் மீடியா சென்டர் ஃபார் ஏசியா என்ற அமைப்பின் மூலமாக, இதற்கான திறன் வளர்த்தல்; கரம் பிடித்து ஆதரவளித்தல்; ஆகியவற்றின் மூலம் இந்த வழிமுறை செயல்படுத்தப்படும்.

அறிவியல் தொழில் நுட்பத்துறையினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கொள்கையின் உள்ளடக்கம் 13 இந்திய மொழிகளில், தெரிந்தெடுக்கப்பட்ட சமுதாய வானொலி நிலையங்கள் மூலமாக 1 ஆகஸ்ட் 2020 முதல் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. 30 செப்டம்பர் 2020 வரை தொடர்ந்து ஒலிபரப்பப்படும். இந்த வானொலி நிலையங்கள் மூலமாக சேகரிக்கப்படும், பல்வேறு வடிவத்திலான தரவுகள் மத்திய அறிவியல் தொழில் நுட்பத்துறை, அறிவியல் தொழில்நுட்பம் புதுமைக்கொள்கை 2020 இல் சேர்க்கப்படும். சமுதாய பிரதிநிதிகளுடன், கவனத்துடன் கூடிய கலந்துரையாடல்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டன.

- AD. ராஜேந்திரன்

விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கும், வேளாண் துறையில் புதிதாகத் தொழில் தொடங்குபவர்களை மத்திய அரசு ஊக்குவித்து வருவதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறினார்.

ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் புதுமைகள், வேளாண் தொழில் முனைவோர் குறித்த திட்டங்களும் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

2020- 2021 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக வேளாண் பதப்படுத்துதல், உணவுத் தொழில்நுட்பம், மதிப்புக் கூட்டுதல் ஆகிய துறைகளில், 112 புதிய ஸ்டார்ட்அப் தொழில் நிறுவனங்கள் தொடங்கப்படும். அதற்காக நிதி உதவி வழங்கப்படும். இதனால் விவசாயிகளின் வருவாய் பெருகும். இந்த நிதி தவணை முறையில் வழங்கப்படும். முன்னதாக இம்மாதம், நாட்டில் ஆய்வு, விரிவாக்கம், கல்வி ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து பரிசீலனை செய்யப்பட்ட போது, பிரதமர் நரேந்திர மோடி வேளாண் துறையிலும், வேளாண் சார் துறைகளிலும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதையும், புதுமைகள் அறிமுகப் படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்தும் வகையில், புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கும், வேளாண் தொழில் முனைவோர்களுக்கும் ஊக்கம் அளிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

இதுபற்றி மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறுகையில் “வேளாண் துறைக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கவும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும், புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.



பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளது போல, வேளாண் மற்றும் வேளாண் சார் தொழில் பிரிவுகளில், புதிதாகத் தொழில் தொடங்குபவர்களையும், வேளாண் தொழில் முனைவோர்களையும் ஊக்குவிக்க வேண்டும்.'' என்றார்.

விவசாயிகளுக்கு தேவைப்படும் போதெல்லாம், அவர்களுக்குத் தேவையான தகவல்களை அளிக்கும் வகையில், தகவல் தொழில்நுட்பம் செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இளைஞர்கள், விவசாயப் பட்டப்படிப்பு படித்த பட்டதாரிகள் ஆகியோரின் திறனும், தொழில்நுட்பமும், இந்திய சமுதாயத்தின் பாரம்பரிய அறிவுடன் இணைந்து செயல்பட்டு, இந்திய வேளாண் துறையின் முழுத்திறன் கண்டறியப்பட்டு கிராமப் புறங்களில் பெருமளவிலான மாற்றம் நிகழ வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார். வேளாண் துறை செயல்பாடுகளில் சோர்வடையச் செய்யும் செயல்களைக் குறைக்கும் வகையில் புதிய கருவிகளை வடிவமைப்பது, செயல்பாடுகளுக்கான இதர பொருள்களுக்குத் தேவையான வடிவ மாற்றங்களைச் செய்வது ஆகியவற்றுக்காகவும், ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும் ஆண்டுக்கு இருமுறை கணிப்பொறி தொழில்நுட்ப நீள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யலாம் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

வேளாண்துறை போட்டியிடும் திறன் கொண்டதாக மாற்றப்பட வேண்டியது அவசியம் என்றும், வேளாண் அடிப்படையிலான செயல்பாடுகளுக்குக் கரம் பிடித்து உதவி செய்யப்பட வேண்டும் என்றும், விரைவில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

– S. மோகன்


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை * அருணை முரசு

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**

# சிந்தனை முத்துக்கள்



போன வாரம் தாண்டா இந்தியாவுக்குள்ளயே போனேன்....
கொரானா
அதுக்குள்ள ஆறு வருசமா வந்த எல்லா பொருளாதார சரிவும்
என் தலைல போட்டான் டா அந்தாளு...


எதுக்கு ஐயா சோறு கேட்டா காசு குடுக்கறீங்க..?
என் கஷ்டம் என்னோடயே போகட்டும் நீ கடையில போயி சாப்டுக்கோ..


காலைல பேங்க்குக்கு போயிருந்தபோது நாலஞ்சு பேர் மாஸ்க் போட்டுட்டு வந்திருந்ததப் பார்த்து அப்படியே நடுநடுங்கிப் போயிட்டேன்...
அப்பறம் அவங்க வந்து 'எங்களுக்குக் கொரோனா வைரஸெல்லாம் இல்ல, பேங்க்கை கொள்ளையடிக்கத்தான் வந்திருக்கோம்'னு சொன்ன அப்புறந்தான் 'அப்பாடா'ன்னு நிம்மதியா மூச்சை விட்டேன் !.


முகத்தின் அமைப்புக்கு ஏற்ப மாறும் 3D MASK
தடுப்பூசியைத் தவிர வேற எல்லாத்தையும் உடனே கண்டுபிடிச்சுடுறீங்க..


*Police
இன்னிக்கு வெளியில் வரக் கூடாதுனு தெரிஞ்சு ஏன்டா வெளியில் வந்திங்க
*My Frnd
*Me
வேற யாராவது வெளியில வராங்கன்னு செக் பண்ண வந்தோம்


THIS IS THE FIRST TIME IN THE HISTORY OF ENGLISH LANGUAGE THAT A QUESTION AND THE ANSWER ARE EXACTLY THE SAME!!!
Question: Who declared Coronavirus as a pandemic?
Answer: WHO declared Coronavirus as a pandemic.


முன்னெல்லாம் செக் குடுத்தா பேங்க் அக்கவுண்ட்ல காசு இருக்கானு கேப்பானுங்க..
இப்பெல்லாம் அந்த பேங்க் இருக்கானு கேக்கறானுங்க..


In reception
*Corona


How people viewed Covid-19 3 months ago
Now


# ஒருவன் தன்னைப் பற்றி அதிக உயர்வாக எண்ணுவதும், அதிகத் தாழ்வாக எண்ணுவதும் இரண்டுமே தவறுதான்!

அக்கம்பக்கத்து வீட்டுகாரங்க எல்லோரும் நல்லா இருக்கனும் ஆண்டவா..



கொரோனா சாமி துணை


பயணங்களிலேயே மிகவும் திகில் வாய்ந்த திக் திக் பயணம் எது தெரியுமா..



ரிசர்வ் விழுந்த பின்பு பெட்ரோல் பங்க் போகுற வரைக்குமாது வண்டி நிக்காம போகணுமே என்று பயந்து கொண்டே ஓட்டிக்கொண்டு செல்வதுதான்..




வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும் என்ற சிந்தனை உனக்குள் வந்து விட்டாலே பொறுப்பு என்பது தன்னாலே அமைந்து விடுகிறது



சென்னை திரும்பும் வெளியூர் வாசிகள்




ஆஹா...ரொம்ப ஆவலோட எதிர்பாக்குறாங்களே...?

காயங்களோடு சிரிப்பது அவ்வளவு எளிதல்ல.

அப்படி சிரிக்க பழகிக் கொண்டால் எந்த காயமும் அவ்வளவு பெரிதல்ல.

கஷ்டப்படுறவன் கிட்ட சிரிப்பு இருக்காது...

சிரிக்கிறவன் கிட்ட கஷ்டம் இருக்காது... ஆனால்

கஷ்டத்திலும் சிரிக்கிறவன் கிட்ட தோல்வி இருக்காது...

ஒரு வேளையாவது உணவு கிடைக்கும் என்று தான் பள்ளி சென்றோம்



இன்று பள்ளி ஆன்லைன்ல வந்துவிட்டது ஆனால் உணவு எதிலும் வரவில்லை...

-144-



கிருமி புகாமல் இருக்க தட்டுத்தடுமாறி எப்படியோ முகத்துக்கு முக-கவசம் வாங்கிவிட்டேன்...

அதேபோல் பசி புகாமல் இருக்க வயிற்றுக்கொரு கவசமிருந்தால் கூறுங்களேன் தயவுசெய்து...! எப்படியாவது வாங்கிவிடுகிறேன்...

# மாணவர்கள் 500-க்கு 500 மார்க் வாங்கிய ரகசியம் இதுதான்..!

## உண்மையை உடைக்கும் தனியார் பள்ளிகள்

கொரோனா ஊரடங்கு தொடர்ச்சியாக நீடித்துவந்த காரணத்தால், தமிழ்நாட்டில் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வை ரத்து செய்த பள்ளிக் கல்வித்துறை, 'அனைத்து மாணவர்களையும் தேர்ச்சி பெற்றவர்களாக' அறிவித்தது. அடுத்த கட்டமாக, காலாண்டு, அரையாண்டு தேர்வுகளில் ஏற்கெனவே மாணவர்கள் பெற்ற மதிப்பெண் களையும், அவர்களது வருகைப் பதிவேட்டையும் கணக்கில்கொண்டு பொதுத்தேர்வு மதிப்பெண்கள் கணக்கிடப்பட்டன.

தமிழக பள்ளிக் கல்வித்துறை வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, பெரும்பான்மையான மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் வாங்கியிருப்பது பலத்த சந்தேகத்தையும், விவாத அலைகளையும் எழுப்பியிருக்கிறது.

இது குறித்துப் பேசும் ஆசிரியர் சங்க நிர்வாகிகள், ''உயிர்க்கொல்லி நோயான கொரோனா தொற்றிலிருந்து மாணவர்களைப் பாதுகாப்பதற்காக 10-ம் வகுப்பு பொதுத் தேர்வை ரத்து செய்த அரசின் முடிவு வரவேற்கத்தக்கது. ஆனால், மாணவர்களுக்கான பொதுத்தேர்வு மதிப்பெண்களைக் கணக்கிடுவதில்தான் அரசு கோட்டைவிட்டுவிட்டது.

அதாவது, '10-ம் வகுப்பில் ஒரு மாணவன் காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளில் பெற்றுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில், 80 % மதிப்பெண்களும், அந்த மாணவனின் பள்ளி வருகைப் பதிவேட்டுக் கணக்கை அடிப்படையாக வைத்து 20 % மதிப்பெண்களுமாகக் கணக்கிட்டு அந்த மாணவனின் பொதுத்தேர்வு மதிப்பெண் நிர்ணயிக்கப்படும்' என பள்ளிக் கல்வித்துறை அறிவித்தது.

இதையடுத்து, மாநிலம் முழுவதுமுள்ள அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளிலிருந்து 10-ம் வகுப்பு மாணவர்களின் மதிப்பெண்கள் மற்றும் வருகைப் பதிவேட்டு விவரங்கள் மாவட்டக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

இதில், தங்கள் கைவசமிருந்த உண்மையான மதிப்பெண் பட்டியல் மற்றும் வருகைப்பதிவேடு குறித்த கணக்குகளை ஒப்படைத்த பள்ளிகளும் உண்டு. மாறாக, தங்கள் பள்ளிக்குப் பெயர்கிடைக்க வேண்டும் என்ற காரணத்துக்காக, பொய்யான



ஆவணங்களை உருவாக்கி, கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைத்த பள்ளிகளும் உண்டு. குறிப்பாக, சில தனியார் பள்ளிகள், தங்கள் பள்ளி கல்வியில் சிறந்து விளங்குவதாகக் காட்டிக்கொள்வதற்காக ஏற்கெனவே உள்ள காலாண்டு, அரையாண்டு மதிப்பெண்கள் பட்டியலை மறைத்துவிட்டு, புதிதாக அதிகப்படியான மதிப்பெண்கள்கொண்ட பட்டியலைத் தயார் செய்து பள்ளிக் கல்வித் துறைக்கு அனுப்பிவைத்துள்ளன.

**மதிப்பெண் பட்டியல்:** தனியார் பள்ளிகள், தங்கள் தேர்ச்சி விகிதத்தை அதிகப்படுத்திக் காட்டு வதற்காக பொதுத்தேர்வுக்குரிய பாடங்களை முந்தைய கல்வி ஆண்டிலிருந்தே கற்பித்துவரு கின்றன என்ற குற்றச்சாட்டுகள் ஏற்கெனவே இருந்துவருகின்றன. இந்த நிலையில், 'தங்கள் பள்ளி மாணவர்களுக்கான மதிப்பெண்களை, தாங்களே குறித்து அனுப்பலாம்' என்று தனியார் பள்ளிகளின் கைகளில் தமிழக அரசே பேனாவைக் கொடுத்துவிட்டால், அவர்கள் என்ன செய்வார்கள்..? தங்கள் இஷ்டம்போல் தங்களுக்குத் தாங்களே மதிப்பெண் கொடுத்து, கொண்டாடித் தீர்த்துவிட்டார்கள்.

சில பள்ளிகள், முந்தைய தேர்வுகளில் குறைவான மதிப்பெண் பெற்றிருந்த மாணவர்களின் பெற்றோரிடம் தகவல் தெரிவித்தும், பணம் வாங்கிக்கொண்டும், புதிதாக 'காலாண்டு - அரையாண்டுத் தேர்வுக்கான பதில்களை' எழுதி வாங்கி சேர்ப்பித்தச் சம்பவங்களும் அரங்கேறி யதைச் சில மாதங்களுக்கு முன்னரே செய்திகளில் பார்த்தோம். அப்போதே இது குறித்து அரசு எச்சரிக்கையாகக் கண்காணித்து, உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். (17-8-2020) 10-ம் வகுப்பு மாணவர்களுக்கான மதிப்பெண் சான்றிதழ்களை இணையத்திலிருந்து டவுன்லோடு செய்துகொள்ளலாம்' என அரசு அறிவித்திருக்கிறது. உடனடியாக இந்த முடிவை பள்ளிக் கல்வித்துறை கைவிட வேண்டும்.



'அனைத்து மாணவர்களும் தேர்ச்சி' என்ற அளவில் நிறுத்திக்கொண்டு, மாணவர்களுக்கான தனிப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்களை வழங்காமல் நிறுத்திவைக்க வேண்டும். மேலும், மதிப்பெண் விஷயத்தில் மோசடி செய்த பள்ளிகள்மீது உரிய நடவடிக்கை எடுத்தால்தான், இனிவரும் காலத்திலாவது இது போன்ற மோசடிகள் நடைபெறாமல் தடுத்து நிறுத்த முடியும்'' என்றனர் ஆதங்கத்துடன்.

இப்போதே சில தனியார் பள்ளிகள், தங்கள் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களை போஸ்டர், ஃப்ளெக்ஸ், தினசரி செய்தித்தாள்களின் வழியே பெருமையாகப் பட்டியலிட்டு விளம்பரம் செய்ய ஆரம்பித்துவிட்டன. இந்த நிலையில், 'பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும்' என்ற உந்துதலோடு மிகக் கடுமையாக உழைத்த மாணவர்களும், அவர்களுடைய பெற்றோர்களும் அரசின் இந்த முடிவால் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

**மாணவர்கள்:** இது குறித்து மாணவர் - பெற்றோர் தரப்பிலிருந்து பேசுபவர்கள், ''நல்ல மதிப்பெண் பெறவேண்டும் என்று உண்மையாகவே ராப்பகலாகக் கண்விழித்துப் படித்த பிள்ளைகள், 'பொதுத்தேர்வை எழுத முடியாமல் போய் விட்டதே...' என வருத்தத்தில் இருக்கின்றனர். கொரோனா காலகட்டத்தில் தேர்வை ரத்து செய்யும் அரசின் முடிவு சரியானதுதான். அதை நாங்கள் குறை சொல்லவில்லை. ஆனால், மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகும் மதிப்பெண் விவகாரத்தில், அரசு கொஞ் சமாவது கவனம் செலுத்தியிருக்க வேண்டாமா?

பள்ளி நிர்வாகம் கொடுத்த காலாண்டு, அரையாண்டுத் தேர்வு புள்ளிவிவரங்களைவைத்து ஒரு மாணவனுக்கு மதிப்பெண்களைக் கொடுத்துள்ள பள்ளி கல்வித்துறை, இது குறித்து ஆய்வு ஏதும் செய்திருக்கிறதா? கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் உண்மையானவைதான் என்று எப்படி ஏற்றுக்கொண்டார்கள்? சாதாரணமாக ஒரு மாணவனின் மதிப்பெண் பட்டியலிலுள்ள நாள்பட்ட எழுத்துகளுக்கும், புத்தம் புதிதாகத் தயார் செய்யப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கும் கூடவா வித்தியாசம் தெரியாது? ஒரு மாணவனின் கல்வித்தரத்தை நிர்ணயம் செய்ய வேண்டுமானால், குறைந்தபட்சம் அந்த மாணவனின் மூன்று ஆண்டுக்கால கல்வித்தரத்தைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டாமா?

9-ம் வகுப்பிலிருந்து தேர்ச்சி பெறுவதற்கே சிரமப்பட்ட ஒரு மாணவன், 10-ம் வகுப்பு காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளில் மட்டும் எப்படி அதிக அளவில் மதிப்பெண்களைப் பெற்றிருக்க முடியும்? கடந்த வருடங்களில் இல்லாத அளவுக்கு இந்த வருடம் பெரும்பான் மையான மாணவர்கள் 450 மதிப்பெண்களுக்கு மேல் எடுத்திருக்கிறார்கள் என்பதே பள்ளிகள் உண்மையான தகவல்களைக் கொடுத்திருக்க வில்லை என்பதற்கான சான்றுகள்தானே?

தேர்ச்சி அடைவதற்கே மிகவும் சிரமப்படும் ஒரு மாணவன், நன்றாகப் படிக்கும் மாணவனைவிடவும் அதிக மதிப்பெண்கள் பெற்றிருப்பது அந்தக் குழந்தைகள் மனதில் எந்தவிதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற குறைந்தபட்ச சிந்தனையைக்கூட அரசு கவனிக்கத் தவறிவிட்டதே.

இந்த விவகாரத்தில், தனியார் பள்ளிகள்மீதான குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் கேட்டு, 'தமிழ்நாடு நர்சரி, பிரைமரி, மெட்ரிக், மேல்நிலை மற்றும் சி.பி.எஸ்.சி பள்ளிகள் சங்க'த்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர் ஜி.ஆர்.ஸ்ரீதர் கூறியதாவது.

"ஒட்டுமொத்தமாகத் தனியார் பள்ளிகள்மீது குறை சொல்லிவிடக்கூடாது. ஏனெனில், எவ்வளவு நியாயமாக பொதுத்தேர்வு நடத்தினாலும்கூட, விடைத்தாளை திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களில் ஒரு சிலர் தவறாகத் திருத்தி விடுவதால்தானே மறுகூட்டலுக்காக விண்ணப்பித்து, உரிய மதிப்பெண் பெறுகிற நடைமுறையே இருக்கிறது. இதற்காக ஆசிரியர்கள் அனைவருமே தவறானவர்கள் என்றோ அல்லது அந்தக் குறிப்பிட்ட விடைத்தாளை திருத்திய ஆசிரியர் தப்பானவர் என்றோ சொல்லிவிட முடியாது அல்லவா?

- M. முருகம்மாள்



# தமிழகத்தில் விரைவில் நகரும் ரேஷன் கடைகள்

மக்கள் குடியிருப்புகளுக்கு அருகில் வந்து பொருட்கள் வினியோகம் செய்வதற்காக தமிழகம் முழுவதும் 3,501 நகரும் ரேஷன் கடைகளை முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி விரைவில் தொடங்கிவைக்கிறார்.

தமிழக சட்டசபையில் 110-ம் விதியின் கீழ் முதல்-அமைச்சர் கடந்த மார்ச் 30-ந்தேதி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். மக்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே ரூ.9.66 கோடி செலவில் 3,501 அம்மா நகரும் ரேஷன் கடைகள் தொடங்கி செயல்படுத்தப்படும் என்று கூறினார். அதற்கான அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது.

நகரும் ரேஷன் கடைகள் செயல்படும் நேரம், நாள், இடம் ஆகியவற்றுக்கு மாவட்ட கலெக்டர்களின் அனுமதியை பெற வேண்டும். கலெக்டர் நிர்ணயிக்கும் இடங்களில் அவை இயங்கும். நகரும் ரேஷன் கடைகள் செயல்பட வேண்டிய நாள், அரசு விடுமுறையாக இருந்தால், அடுத்த வேலை நாளில் அவை செயல்பட வேண்டும்.

**மக்கள் கூடும் இடம்:** பொருள் வினியோகம் செய்யும் இடம், அரசு கட்டிடம், உள்ளாட்சி நிறுவனங்களின் கட்டிடம் அல்லது பொதுமக்கள் அதிகம் கூடும் இடமாக இருக்கலாம். இதுபற்றி மக்களிடம் நன்றாக விளம்பரம் செய்ய வேண்டும்.

நகரும் ரேஷன் கடை இயங்கும் இடத்தில் பெயர்ப் பலகை வைக்கப்பட்டு, அதில், அனைவரும் அறியும் வகையில் பொருட்கள் வழங்கும் நாள், அட்டைதாரர் வசிக்கும் பகுதி, கடை செயல்படும் நேரம் ஆகிய விவரங்கள்

குறிப்பிடப்பட வேண்டும். அந்த நாளில் பொருள் வாங்காத ரேஷன் அட்டைதாரர், பின்னர் தாய்க்கடையில் பொருட்களை பெற அனுமதிக்க வேண்டும்.

**வாடகை வாகனம்:** நகரும் ரேஷன் கடைகளை செயல்படுத்த மூடக்கூடிய வாகனங்களை வாடகைக்கு அமர்த்தலாம். இதற்கான வாடகை, பொருள் ஏற்றி, இறக்கும் சுமை கூலி ஆகியவற்றை ஆண்டுக்கு ஒருமுறை நிர்ணயம் செய்ய கலெக்டர் மற்றும் 4 அதிகாரிகளை கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தில் எடைத்தராசு, பி.ஓ.எஸ். எந்திரம் இருக்க வேண்டும். அவற்றில் கொண்டு செல்லப்படும் கட்டுப்பாட்டு பொருட்கள், சிறப்பு பொதுவினியோக திட்டப் பொருட்களுக்கு தகுந்த இடப்பெயர்வு காப்பீடு செய்யப்பட்டு இருக்க வேண்டும். அந்த வாகனத்தில், நகரும் ரேஷன் கடை என்ற பதாகை கட்டப்பட வேண்டும்.

**சென்னையில் 401 நகரும் ரேஷன் கடைகள்:** நகரும் ரேஷன் கடைகளில் மாற்றுத்திறனாளிகளை அமர்த்தாமல் அவர்களை ரேஷன் கடைகளில் இடமாற்றம் செய்ய வேண்டும். அனைத்து பொருட்களையும் ஒரே நாளில் ஒரே தவணையில் அட்டைதாரர்களுக்கு வழங்க வேண்டும். பொருட்களின் தரத்தை கள அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இந்த திட்டத்தை முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி விரைவில் தொடங்கி வைக்க உள்ளார். அதற்கு ஏதுவாக அனைத்தையும் தயார் நிலையில் வைக்க வேண்டும். ஒவ்வொரு மண்டலத்திலும் எத்தனை நகரும் ரேஷன் கடைகள் அமைக்கப்பட உள்ளன என்பதும் இறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, சென்னை மண்டலத்தில் 401 கடைகள், காஞ்சீபுரம் மண்டலத்தில் 107, திருவள்ளூரில் 118 கடைகள் தொடங்கப்பட உள்ளன. அந்த வகையில் தமிழகம் முழுவதும் 3,501 கடைகள் தொடங்கப்பட்டு, அதன் மூலம் 5 லட்சத்து 36 ஆயிரத்து 437 பேர் பயனடைவார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**- குருதேவ்**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : makkalvisaranainews@gmail.com
Cell : 93821 33334, 93821 44446

# தனியாக போராடு

சோம்பேறிகளுக்கு தான் அனைத்து
விடயமும் கடினமாக தோன்றும்
முயற்சி உள்ளவனுக்கு அனைத்தும்
இலகுவாக தான் கண்ணுக்கு தெரியும்
ஒரு பறவை ஒரு கிளையில் அமரும் போது
அது நம்புவது அமர்ந்திருக்கும் கிளையை
இல்லை... தனக்கு இருக்கும் சிறகுகளைதான்
அது போல நீயும் உன்னை நம்பு
வாழ்க்கையில் தோல்வியும்
ஒரு நாள் பயந்து ஓடி விடும்
அடுத்தவர்களின் வளர்ச்சியை பார்த்து
பொறாமைப்படும் மனம் கொண்டவர்கள்
அவர்களின் வளர்ச்சியை பார்க்கும் போது
அவனது முயற்சியையும் சேர்த்து பார்
உனக்கு பொறாமை வராது

வெற்றி எனும் இலக்கை அடைவதற்கு
யாரும் நமக்கான பாதையை



உருவாக்கமாட்டார்கள்
நாம் தான் அதற்கான பாதையை
செதுக்கவேண்டும்
உழைப்பையும் ஊக்கத்தையும் மட்டும்
வைத்து வாழ்க்கையில் வெற்றி பெறமுடியாது
உழைப்பு மற்றும் ஊக்கத்துடன்
தன்னம்பிக்கை எனும்
ஆயுதமும் இணைந்தால் மட்டும் தான்
வெற்றிக்கு வித்திடும்
நிலத்தில் தவறி விழுந்த விதையே
முளைத்து மரமாகும் போது
தடுமாறி விழுந்த நம் வாழ்வு மட்டும்
சிறப்பாக மாறாமல் போய் விடுமா?
விழுந்தபோதும் தன்னம்பிக்கையுடன்
எழவேண்டும்

எந்த சந்தர்ப்பத்திலும் முடிவுகளை நாம் தான்
எடுக்க பழக்க வேண்டும்
பலரிடம் ஆலோசனை கேட்கலாம் ஆனால்
இறுதி முடிவு நம்முடையதாக தான்
இருக்கவேண்டும்
அப்படி இருந்தால் தான் பிரச்சனைகளை
எதிர்கொள்ளும் தன்னம்பிக்கையும் நமக்கு
வளரும்.
நீ தனியாக போராட பலம் இருந்தால்
மட்டும் போதாது
அதற்கான மன உறுதியும் உன்னிடம்
இருக்கவேண்டும்
அப்படி இருந்தால் தான் வெற்றி பெறமுடியும்
கடைசி நேரத்தில் கூட எதாவது அதிசயம்
நடக்கலாம்... அதனால் ஒரு போதும்
தன்னம்பிக்கையை மட்டும்விட்டு விடாமல்
முழு மன உறுதியுடன் முயற்சி செய்து
கொண்டே இரு.

- கவிஞர் **நிவேதிதா**

# அடுத்த மாதம் நடைபெறும் முதல் உலக சூரியசக்தித் தொழில்நுட்ப உச்சி மாநாட்டில், அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களை வெளிப்படுத்த ஐ.எஸ்.ஏ. திட்டமிட்டுள்ளது

மத்திய மின் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்திறன் மேம்பாடு (IC) மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சரும் ISA சட்டமன்றத் தலைவருமான திரு ஆர்.கே.சிங் ஐஎஸ்ஏ ஏற்பாடு செய்த, செப்டம்பர் 08, 2020 அன்று இணைய வாயிலாக நடைபெற இருக்கும் முதல் உலக சூரிய தொழில்நுட்ப உச்சி மாநாட்டின் விவரங்களை இன்று பகிர்ந்து கொண்டார். இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம், அதிநவீனத் தொழில்நுட்பங்கள் மற்றும் அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களில் கவனத்தை ஈர்ப்பதாகும், இது சூரிய சக்தியை மிகவும் திறமையாகப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு உத்வேகம் அளிக்கும். இந்த நிகழ்வின் போது, உலகெங்கிலும் உள்ள ஆராய்ச்சியாளர்கள் சூரிய ஆற்றல் குறித்த தங்கள் கட்டுரைகளை வெளியிட உதவும் சூரிய ஆற்றல் பற்றிய ஐஎஸ்ஏ இதழை (IJOSE) ISA தொடங்கவுள்ளது. இந்த இதழில் உள்ள கட்டுரைகள் உலகளாவிய நிபுணர்களால் மதிப்பாய்வு செய்யப்படும், மேலும் ISAவின் பரந்த NFPகளின் நெட்வொர்க் (தேசிய குவிய புள்ளிகள்) மற்றும் STAR (சூரிய தொழில்நுட்பம் மற்றும் பயன்பாட்டு வள மையங்கள்) மையங்கள் மூலம் உறுப்பு நாடுகளைச் சென்றடையும்.

அனைத்து ISA பிராந்தியங்களிலிருந்தும் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் வழங்கும் முதல் உலக சூரியத் தொழில்நுட்ப உச்சி மாநாட்டின் தொடக்க உரையை இந்தியப் பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைப்பார். உலகின் விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் உயர்மட்டப் பிரமுகர்கள் மற்றும் ஒரு தலைமை நிர்வாக அதிகாரியின் மாநாடு, குறைந்த விலை, புதுமையான மற்றும் மலிவு




சூரியசக்தித் தொழில்நுட்பங்கள் குறித்த விவாதங்களின் தொனியை அமைக்கும். தொடக்க அமர்வில் மூத்த அரசாங்க செயல்பாட்டாளர்கள், உலகளாவிய நிறுவனங்கள், நிதி மற்றும் பலதரப்பு நிறுவனங்கள், சிவில் சமூகம், அடித்தளங்கள் மற்றும் Think & Thanks அமைப்பின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள்.

மத்திய மின் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்திறன் மேம்பாடு (IC) மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சரும் ISA சட்டமன்றத் தலைவருமான திரு ஆர்.கே.சிங் தொடக்க நிகழ்வில் சிறப்புரையாற்றிய போது, முதல் உலக சூரியசக்தித் தொழில்நுட்ப உச்சி மாநாட்டைப் பற்றிக் கருதியதற்காக ISAவை வாழ்த்தினார். இந்த நிகழ்வு குறிக்கோளை அடைய சேவை செய்ய உதவுவது மட்டுமல்லாது புதுமைகள் மூலம் உலகெங்கிலும் சூரிய சக்தியின் தேவையான வளர்ச்சியை ஊக்குவிக்கும். இந்த முக்கியமான சந்திப்பில், உலகம் கொரோனா தொற்றுநோயை எதிர்த்துப் போராட முயற்சிக்கும் போது, நமது கூட்டு முயற்சிகள் இந்தச் சவாலை எதிர்கொள்ளவும், அனைவருக்கும் உலகளாவிய மின்சார அணுகலின் நோக்கத்தை அடையவும் உதவும். மாநாட்டில் பங்கேற்க அனைத்து பயனாளர்களையும் திரு சிங் அழைத்தார்.

– S. **சரவணன்**

# சுகாதாரச் சேவைகளை அனைவருக்கும் உறுதிசெய்ய தேசிய டிஷிட்டல் சுகாதார இயக்கத்தை பிரதமர் அறிவித்தார்

சுதந்திர தினத்தன்று தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கம் குறித்து மாண்புமிகு பிரதமர் வெளியிட்ட அறிவிப்பு நாட்டிலுள்ள அனைத்து மக்களும் அணுகக்கூடிய மருத்துவச் சேவைகள் பற்றிய நம்பிக்கையை அதிகரித்துள்ளது. லட்சக்கணக்கானோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதால், மருத்துவமனைகளையும், மருத்துவ அலுவலர்களையும் கோவிட்- 19 பெருந்தொற்று மிகுந்த அழுத்தத்துக்குள்ளாக்கியது.

ஆனால், மருத்துவ சமூகம் இந்தச் சவாலை உறுதியுடன் எதிர்கொண்டு இறப்பு விகிதத்தை வெகுவாகக் குறைத்ததால், பல வளர்ந்த நாடுகளை விட இறப்பு விகிதம் குறைவாகவே உள்ளது. தரம் வாய்ந்த சுகாதாரச் சேவையை அளிக்கும் முயற்சியில் பிரதமரின் மக்கள் ஆரோக்கியத் திட்டம்-ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தி, நாட்டின் கிட்டத்தட்ட பாதி மக்கள் தொகைக்கு இலவச சுகாதாரச் சேவையை வழங்குகிறது. தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கம் சுகாதாரத் துறையில் ஒரு புதிய புரட்சியை உண்டாக்கும் என்று பிரதமர் தற்போது அறிவித்துள்ளார். இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு இந்தியருக்கும் சுகாதார அடையாள அட்டை வழங்கப்படும்.

ஒவ்வொரு பரிசோதனை, ஒவ்வொரு நோய், சந்தித்த மருத்துவர்கள், எடுத்துக் கொண்ட மருந்துகள் மற்றும் நோயறிதல் குறித்த தகவல்களை இந்த சுகாதாரக் கணக்கு கொண்டிருக்கும். எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய வகையிலும், எளிதாக அணுகக்கூடிய வகையிலும் இந்தத் தகவல்கள் இருப்பதால், நோயாளி வேறு இடத்துக்கு மாறி இன்னொரு மருத்துவரைப் பார்த்தாலும் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். முழுமையான மற்றும் தன்னார்வ சுகாதார சேவைத் திட்டமாக தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கம் இருப்பதால் மருத்துவர்கள், மருத்துவமனைகள், மருந்தகங்கள், காப்பீட்டு நிறுவனங்கள் ஆகியவற்றை இணைத்து, டிஜிட்டல் சுகாதார உள்கட்டமைப்பை உருவாக்கும். ஆதார் மற்றும் கைபேசி எண் ஆகிய தகவல்களைக் கொண்டு உருவாக்கப்படும் சுகாதார அடையாள அட்டை ஒவ்வொருவருக்கும் பிரத்யேக அடையாள எண்ணை வழங்கும். சுகாதார அடையாள எண், டிஜிமருத்துவர், தொலைதூர மருத்துவம், மின்-மருந்தகம், சுகாதாரச் சேவைப் பதிவகம் மற்றும் டிஜிட்டல் முறையில் சேமிக்கப்பட்ட தனிப்பட்ட மருத்துவக் கோப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக தேசிய டிஜிட்டல் சுகாதார இயக்கம் இருக்கும்.

நிறைய நோயாளிகளுக்கு இந்த சுகாதார அட்டை முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று திருச்சிராப்பள்ளியை சேர்ந்த திருமதி. ஜெய்கீதா கூறுகிறார். சுகாதார சேவை அமைப்பில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்றும், பிரதமரின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்றும் அவர் கூறுகிறார். ஏழைகளுக்கு நல்ல மருத்துவச் சேவை கிடைக்காததால், எய்ம்ஸ் போன்ற மருத்துவ நிறுவனங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்படவேண்டியது அவசியம். இதனால், தரமான மருத்துவச் சேவைக்காக கிராமத்தினர் அதிகம் பயணம் செய்ய வேண்டியது இருக்காது.

அரசால் செயல்படுத்தப்படும் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்கள், மின்-சஞ்சீவனி, மக்கள் மருந்தகங்கள் ஆகியவை உத்தரவாதமளிக்கப்பட்ட சுகாதாரச் சேவையைப் பயனாளிகள் பெற உதவுகின்றன. பிரதமரால் 2018-இல் தொடங்கி வைக்கப்பட்ட




சுகாதார உறுதியளிப்புத் திட்டமான பிரதமரின் மக்கள் சுகாதாரத் திட்டம் குறிப்பாக கோவிட்-19 காலகட்டத்தில் மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவமனை அனுமதிகளுக்காக ஒரு குடும்பத்துக்கு வருடத்துக்கு ரூ 5 லட்சம் சுகாதாரக் காப்பீட்டை பிரதமரின் மக்கள் சுகாதாரத் திட்டம் அளிப்பதால், உலகத்திலேயே மிகப் பெரிய சுகாதார உறுதியளிப்புத் திட்டமாக இது இருக்கக்கூடும். மத்திய மற்றும் மாநில அரசுகளிடையே இந்தத் திட்டம் பங்கிட்டுக் கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில், பிரதமரின் மக்கள் சுகாதாரத் திட்டம்-முதல் அமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் சில குறிப்பிட்ட நோய்களுக்கு பணமில்லா மருத்துவமனை அனுமதி வசதியை அளித்து, ஒரு குடும்பத்துக்கு ஒரு வருடத்துக்கு ரூ 5 லட்சம் வரை காப்பீட்டை வழங்குகிறது.

குறிப்பாக பெருந்தொற்று ஒன்றின் பரவலின் போது சுகாதார சேவைத் துறை மிகவும் முக்கியமானதாகும். தொலை-ஆலோசனையின் மூலம் ஏழை மற்றும் கிராமப்புற மக்களுக்கு மருத்துவ சேவைகள் கிடைக்குமாறு அரசு செய்துள்ளது. மக்களால் மருத்துவமனைகளுக்கு செல்லமுடியாமல் இருப்பதாலும், மருத்துவர்கள் கோவிட்- 19 நோயாளிகளைக் கையாண்டுக் கொண்டிருப்பதாலும், கோவிட்-19 பொதுமுடக்கத்தின் போது மின்சஞ் சீவனி திட்டம் பிரபலமடைந்து வருகிறது. நோயாளிகளின் முந்தைய மருத்துவ வரலாறு கிடைப்பதால் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க டிஜிட்டல் சுகாதார அட்டைகள் மருத்துவர்களுக்கு உதவும். இது நமது நாட்டின் மருத்துவ சேவை அமைப்பில் புரட்சியை உண்டாக்கி, ஏழைகள் மற்றும் பின்தங்கியோருக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

**- ஆசிரியர்**

# நாட்டிலுள்ள காடுகளின் தரத்தையும், மரங்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க தீவிரம்!

## பிரகாஷ் ஜவடேகர் – நிதி அமைச்சகம்

கரியமில சேமிப்பை அதிகப்படுத்துவதற்காக நாட்டிலுள்ள காடுகளின் தரத்தையும், மரங்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகம் கவனம் செலுத்தி வருகிறது," என்று புது தில்லியில் நடைபெற்ற மாநில வன அமைச்சர்கள் கூட்டத்தில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் திரு பிரகாஷ் ஜவடேகர் கூறினார். சுற்றுச்சூழல் இணை அமைச்சர் திரு. பாபுல் சுப்ரியோ, அமைச்சகத்தின் இதர அதிகாரிகள், அருணாச்சல பிரதேசம் மற்றும் கோவா முதல்வர்கள், துணை முதல் அமைச்சர்கள் மற்றும் 24 வன அமைச்சர்கள் நான்கு மணி நேரம் நடைபெற்ற இந்த காணொளிக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பேசிய திரு. ஜவடேகர், "எங்களது கொள்கைகள், திட்டங்களில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வரவும், மரம் நடுதல், நகர் வன திட்டத்தின் மூலம் நகர்ப்புற காடுகளை ஊக்குவித்தல், 13 முக்கிய ஆறுகளுக்கு நிலம் சார்ந்த நீர்பிடிப்பு சிகிச்சை, மண் ஈரப்பத பாதுகாப்புப் பணிகளுக்காக தரம் குறைந்த வனப் பகுதிகளின் லிடார் (LiDAR) சார்ந்த கணக்கெடுப்பு மற்றும் வனப் பொருள்களின் எளிதான போக்குவரத்துக்காக தேசிய போக்குவரத்து தளம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தவும் பல முயற்சிகளை நாங்கள் எடுத்துள்ளோம்," என்று கூறினார்.

தேசிய வனக் கொள்கை, தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட உறுதிகள் மற்றும் தரம் குறைந்த காட்டு நிலங்களை சீரமைத்தல் போன்ற தேசிய மற்றும் சர்வதேச இலக்குகளை எட்ட இந்த முயற்சிகள் அவசியம் என்று திரு. ஜவடேகர் கூறினார்.



சிங்கத் திட்டம் மற்றும் டால்பின் திட்டம் ஆகியவற்றை தன்னுடைய சுதந்திர தின உரையின் போது பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்தார். நாடு முழுவதிலும் உள்ள ஆறுகள் மற்றும் கடல்களில் இருக்கும் டால்பின்களின் பாதுகாப்புக்காக இரு வாரங்களுக்குள் முழுமையான டால்பின் திட்டத்தை அரசு தொடங்கும் என்று மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் தெரிவித்தார்.

குறிப்பாகக் கணக்கெடுப்பு மற்றும் வேட்டைக்கெதிரான நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி டால்பின்கள் மற்றும் நீர் வாழ்விடங்களை டால்பின் திட்டம் பாதுகாக்கும். மீனவர்கள் மற்றும் இதர ஆறு/கடல் சார்ந்த மக்களை ஈடுபடுத்தி, உள்ளூர் சமுதாயங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்த திட்டம் பாடுபடும். ஆறுகள் மற்றும் கடல்கள் அசுத்தமாவதைக் கட்டுப்படுத்தவும் டால்பின் பாதுகாப்பு நடவடிக்கைகள் உதவும்.

ஆசிய சிங்கங்களையும், அவற்றின் நிலப்பரப்பையும் முழுமையாக பாதுகாக்கும் நோக்கில் சிங்கத் திட்டத்தை செயல்படுத்தவும் அரசு பணியாற்றி வருவதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார். வாழ்விட மேம்பாடு, சிங்க



மேலாண்மையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல், முன்னேறிய உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சி மற்றும் மிருக மருத்துவம் மூலம் சிங்கங்கள் மற்றும் அவற்றை சார்ந்த உயிர்களின் நோய்களை குணப்படுத்துதல் போன்றவற்றில் சிங்கத் திட்டம் கவனம் செலுத்தும். மனித-மிருக பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்போகும் இந்தத் திட்டம், சிங்கங்களின் வாழ்விடங்களுக்கு அருகில் வசிக்கும் மக்களை ஈடுபடுத்தி, அவர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளையும் வழங்கும்.

காடு வளர்ப்பு மற்றும் தோட்டங்களுக்காக மட்டுமே காம்பா (CAMPA) நிதியை மாநிலங்கள் பயன்படுத்த வேண்டும் என்று திரு. ஜவடேகர் கூட்டத்தில் வலியுறுத்தினார். “80 சதவீத காடு வளர்ப்பு நிதி காடு வளர்ப்பு/தோட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் 20 சதவீதத்தை திறன் கட்டமைத்தலுக்காக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நான் அறிவிக்கிறேன். ரூ 47,436 கோடி காம்பா நிதியை பல்வேறு மாநிலங்களில் காடு வளர்ப்புக்காக ஆகஸ்டு 2019-இல் மத்திய அரசு ஒதுக்கியது. பள்ளி செடி வளர்ப்புத் திட்டத்தையும் விரைவில் அமைச்சகம் அறிவிக்க இருக்கிறது,” என்று கூட்டத்தின் போது அமைச்சர் தெரிவித்தார்.

வனம் மற்றும் இதர துறைகள், அரசு சாரா நிறுவனங்கள், பெருநிறுவன அமைப்புகள், தொழிற்சாலைகள் உள்ளிட்ட பல்வேறு முகமைகளை ஈடுபடுத்தி, ஒருங்கிணைந்த செயல்திட்டத்தின் மூலம் வன நிலங்களில் 2000 நகர வனங்களை அமைக்க இந்த ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தின் போது அறிவிக்கப்பட்ட நகர் வன திட்டத்தைப் பற்றியும் கூட்டத்தின் போது விரிவாக விவாதிக்கப்பட்டது. வேலி அமைத்தல் மற்றும் மண் ஈரப்படுத்துதல் பணிகளுக்கான நிதி உதவியை அமைச்சகம் ஆரம்பத்தில் வழங்கும். மாநகராட்சிகளுடன் இணைந்து வனப்பகுதிகளை உருவாக்கி, அவற்றை மாநகரங்களின் நுரையீரலாக விளங்க செய்வதே இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

பள்ளிக் குழந்தைகளை இளம் வயதிலேயே செடி வளர்ப்பு மற்றும் தோட்ட செயல்பாடுகளில் ஈடுபடுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள பள்ளித் தோட்ட திட்டம் குறித்தும் நான்கு மணி நேரம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் விரிவாக எடுத்துரைக்கப்படு, விவாதிக்கப்பட்டது. இளம் மாணவர்களின் மனங்களில் காடுகள் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த உணர்வை ஏற்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். திட்டத்தின் வழிகாட்டுதல்கள் மாநிலங்களுடன் விரைவில் பகிர்ந்துக் கொள்ளப்படும்.

ஆறுகளின் ஓரம் காடுகளை வளர்க்கவும், நிலத்தடி நீர் மீள்நிரப்புக்காகவும், மண் அரிப்பைக் குறைக்கவும் 13 முக்கிய ஆறுகளின் புத்தாக்கத்துக்காக இந்திய காடுகள் ஆராய்ச்சி மற்றும் கல்விக் குழுவிடம் (ICFRE) ஒப்படைக்கப்பட்டுள்ள ஆய்வு குறித்த முக்கிய தகவல்களையும் கூட்டத்தின் போது திரு. ஜவடேகர் எடுத்துரைத்தார். அதே போல், சீரழிக்கப்பட்ட நிலத்தின் மண் கட்டமைப்பு, நீர் பாதுகாப்பு முறைகள் ஆகியவற்றை செயல்படுத்த உதவும் காற்று சார்ந்த தொலைதூர உணர்வு முறையான லிடார் தொழில்நுட்பம், சமீபத்தில் பரிசோதனை முறையில் தொடங்கப்பட்ட வனப் பொருள்களின் எளிதான போக்குவரத்துக்கான தேசிய போக்குவரத்து தளம் ஆகியவை குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

- V. அருணாச்சலம்

# பல கோடி மக்களுடைய எண்ணங்களின் பிரதிபலிப்பு: ஸ்டெர்லைட் தீர்ப்பு குறித்து ஓபிஎஸ்!


மக்களின் எண்ணங்களை பிரதிபலித்த தீர்ப்பாக இருக்கிறது என்ற துணை முதலமைச்சர் ஓபிஎஸ் வரவேற்பு தெரிவித்து உள்ளார்.

தூத்துக்குடியில் 2018ம் ஆண்டு மே மாதம் ஸ்டெர்லைட்க்கு எதிரான போராட்டத்தின் நடத்தப்பட்ட துப்பாக்கிசூட்டில் 13 பேர் உயிரிழந்தனர். அதன் பின்னர் மே 28ம் தேதி ஸ்டெர்லைட் ஆலைக்கு சீல் வைக்கப்பட்டது.

நிபுணர் குழுவின் அறிக்கைபடி, ஆலையை திறக்க டிசம்பர் மாதம் பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டது. அதன்பிறகு, உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பை அடுத்து கடந்த ஆண்டு பிப்ரவரி 27ம் தேதி உயர்நீதிமன்றத்தில் வேதாந்தா நிறுவனம் வழக்கு தாக்கல் செய்தது.

அந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்பொழுது ஸ்டெர்லைட் அலையை திறக்க அனுமதியில்லை, வேதாந்தா நிறுவன கோரிக்கையை நிராகரிப்பதாக கூறி வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இந்த தீர்ப்புக்கு தமிழகம் முழுவதும் பலத்த வரவேற்பு எழுந்துள்ளது. பலரும் வரவேற்றுள்ளனர். இந் நிலையில் துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தீர்ப்பை வரவேற்று உள்ளார். இது குறித்து அவர் தமது




டுவிட்டர் பதிவில் கூறி இருப்பதாவது:

மாண்புமிகு அம்மாவின் அரசு ஏற்கெனவே அறிவித்திருந்த படி, பல கோடி மக்களுடைய எண்ணங்களின் பிரதிபலிப்பாக "தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறப்பதற்கான தடை தொடரும்" என சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை மனதார வரவேற்கிறேன் என்று ஓபிஎஸ் கூறி உள்ளார். **– இர்வின்**

# இந்தியாவின் 2-வது தலைநகராக சென்னையை அறிவிக்க தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்: ரவிக்குமார் எம்.பி.

இந்தியாவின் 2-வது தலைநகராக சென்னையை அறிவிக்க தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என்று லோக்சபா எம்.பி. ரவிக்குமார் கோரிக்கை விடுத்துள்ளார். தமிழகத்தின் 2-வது தலைநகராக மதுரையை அறிவிக்க வேண்டும் என திடீர் கோரிக்கை எழுந்துள்ளது. ஆளும் அதிமுகவினரே இந்த கோரிக்கையை முன்வைத்தும் வருகின்றனர்.

**மதுரை 2-வது தலைநகர்:** அமைச்சர் உதயகுமார் உள்ளிட்டோர் இந்த கோரிக்கையை நியாயப்படுத்தி ஆதரவு தெரிவிக்கின்றனர். தமிழகத்தின் தலைநகரையே திருச்சிக்கு மாற்ற வேண்டும் என்பது 40 ஆண்டுகால பேசுபொருள். மறைந்த முதல்வர் எம்ஜிஆர் காலத்தில் திருச்சிக்கு தலைநகரை மாற்றுவது குறித்து தீவிரமாக விவாதிக்கப்பட்டது.

**தலைநகரம் மாற்றம் ஏன்?:** ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. கன்னியாகுமரியை சேர்ந்த ஒருவர் சென்னைக்கு வந்து செல்ல 2 நாட்களாகிவிடுகிறது. இதனால்தான் மையமான திருச்சி பகுதிக்கு தலைநகரை மாற்ற வேண்டும் என்கிற கோரிக்கை எழுந்தது. திருச்சிக்கு பதிலாக மதுரைக்கு தலைநகரை மாற்றலாம் என்கிற யோசனையும் ஒருதரப்பால் முன்வைக்கப்பட்டது.

**அந்த பழைய கோரிக்கை:** இந்த நிலையில் திடீரென 2-வது தலைநகர் என்கிற புதிய கோரிக்கை எழுந்திருக்கிறது. இதன் சாதக பாதகங்கள் குறித்து தற்போது விவாதிக்கப்பட்டு வருகின்றன. இதேபோக்கில் தமிழகத்தில் கிடப்பில் கிடக்கிற தமிழகத்தையே 2 மாநிலங்களாக பிரிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை கூட சிலர் மீண்டும் எழுப்பி வருகின்றனர்.

# விநாயகர் சதுர்த்தி வழக்கு; திரும்ப பெறாவிட்டால் அபராதம்!: நீதிமன்றம் எச்சரிக்கை!



தமிழக அரசு கடந்த 13-ந்தேதி வெளியிட்ட அரசாணையில், விநாயகர் சதுர்த்தி விழா வருகிற 22-ந்தேதி கொண்டாடப்படுகிறது. வழக்கம்போல விநாயகர் சதுர்த்தி விழாவில் பிரதான இடங்களில் விநாயகர் சிலைகளை நிறுவி கொண்டாடக்கூடாது என்று தடை விதித்து இருந்தது.

அவரவர் வீட்டில் விநாயகர் சதுர்த்தி வழிபாடு நடத்தலாம் என்றும் தெரிவித்திருந்தது. இந்த உத்தரவை ரத்து செய்து உரிய வழிகாட்டுதல்களின்படி விநாயகர் சதுர்த்தியை கொண்டாட அனுமதிப்பது தொடர்பாக மதுரை ஐகோர்ட்டில் ராஜபாளையம் தர்மாபுரத்தில் உள்ள மாப்பிள்ளை விநாயகர் கோவிலில் சிலை வைத்து வழிபட அனுமதி கோரி வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு இன்று மதுரை ஐகோர்ட்டில் நீதிபதி பொங்கியப்பன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி கூறுகையில்,

தமிழகத்தில் தினமும் 6 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கொரோனா பரவும் சூழல் உள்ள நிலையில் விநாயகர் சதுர்த்தி நிகழ்ச்சி நடத்த எப்படி அனுமதிக்க முடியும்.

கொரோனா தாக்கம் இல்லை என்றால் விநாயகர் சதுர்த்தி நடத்துவதில் நீதிமன்றம் ஏன் தலையிடப் போகிறது? இதுபோன்ற மனுக்களை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்க வேண்டாம் எனவும், மனுதாரர் மனுவை திரும்ப பெறாவிட்டால் அதிக அபராதம் விதித்து தள்ளுபடி செய்ய நேரிடும் என நீதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

- M. தரணி

# புதிய கல்விக் கொள்கை 2020

இந்திய அரசு ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனித்தனியாகக் கல்விக் கொள்கைகளை உருவாக்க முடியாது. நாட்டின் சராசரி என்னவோ அதற்காகத்தான் உருவாக்க முடியும். தமிழகம் நிச்சயமாகப் பல மாநிலங்களைவிட, ஏன் ஒரு பேச்சுக்கு, இந்தியாவிலேயே மிகச் சிறந்த கல்வி வழங்கும் மாநிலம் என்றே வைத்துக்கொள்வோம். அதன் இன்றைய நிலை என்ன? நீட் வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வி ஒரு பக்கம் இருக்கட்டும், அந்தப் பரீட்சை கொண்டுவரப்பட்டபோது என்ன பதற்றம் மாநிலத்தில் இருந்தது? எங்கள் பிள்ளைகளுக்கு மைய நீரோட்டத்துக்கு வருவதற்கு அவகாசம் கொடுங்கள் என்று இறைஞ்ச வேண்டியிருந்தது அல்லவா? ஏன் அந்த நிலை? நம் 'சமச்சீர் கல்வி' ஐசியூவில் இருந்தது என்பதால்தானே கல்வித் துறை தடாரென விழித்தெழுந்து பாடப் புத்தகங்களை மாற்றியமைத்தது? ஆனால், அந்த மாற்றியமைக்கப்பட்ட பாடப்புத்தகங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக நீர்த்துப்போகவும் செய்துகொண்டிருக்கிறதே?

92%-க்குக் குறைவில்லாமல் 'அனைவரும் பாஸ்' என்ற திட்டத்தைத்தான் நம் மாநில அரசு தொடர்ந்து செய்துவருகிறது. பணவீக்கம்போல் 'மதிப்பெண் வீக்கம்' மட்டுமே நம் ஒற்றைச் செயல்திட்டமாக இருந்துவருகிறது. பல்கிப் பெருகியிருக்கும் பொறியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தயாரித்து அனுப்பும் இயந்திரங்களாகவே நம் கல்விக்கூடங்கள் மாறியுள்ளன. அங்கே செல்லும் மாணவர்களில் மூன்றில் இருவர் முதலாமாண்டுக் கணிதத் தேர்வில் தோல்வியடைகிறார்கள் என்கிறது புள்ளிவிவரம்.





புதிய கல்விக் கொள்கை, 10 2 என்பதிலிருந்து 3 5 3 4 என்ற மாற்றத்தைச் சொல்கிறது. 3-5 வயதில் குழந்தைகளுக்கு இளம் பருவக் கல்வி என்பதை முன்வைக்கிறது. பல ஐரோப்பிய நாடுகளில் 6-7 வயதுகளில்தான் குழந்தைகளை முதன்முதலில் பள்ளிக்கே அனுப்புகிறார்கள். ஆனால், இந்தியாவில் தத்தம் குழந்தைகளுக்குப் பெற்றோர்களால் சரியான முறையில் அந்த இளம் வயதில் கற்பிக்கவும் முடியாது, சத்தான உணவும் கொடுக்க முடியாது என்ற பயத்தில், இந்திய அரசு அவர்களை 'பள்ளி அல்லாத கல்வி நிலையத்துக்குள்' கொண்டுவரப் பார்க்கிறது. இதை ஒரு குறுகியகாலத் திட்டமாகவே பார்க்க வேண்டும். 20-30 ஆண்டுகளுக்குள் இதிலிருந்து விடுபடுவதே நல்லது. பெற்றோர்தான் குழந்தைகளின் அந்த வயதில் சரியான ஆசிரியராக இருக்க முடியும்.

இந்த கல்விக் கொள்கையில் அடிப்படையாக நாம் பாராட்ட வேண்டியது, மாநில அளவில் பள்ளிக் கல்வியைக் கட்டுப்படுத்த முன்வைக்கப்பட்டிருக்கும் அமைப்புகள் அனைத்துமே தமிழக அரசின் கல்வித் துறையின் கீழ் வருகின்றன. ஊழலும் செயலின்மையும் காலம் காலமாகப் புரையோடிப்போன அமைப்பு இது. பணியிட மாறுதல் தொடங்கி, பள்ளிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியைக் கையாடல் செய்வதற்கென்றே உருவாக்கப்பட்ட ஊழல் மலிந்த ஒரு துறை இது. தனியார் கல்வி நிறுவனங்களிடம் பைசா வசூல் செய்வதற்கென்றே உருவாக்கப்பட்ட துறை. அரசின் நேரடித் துறையாக, வெளிப்படைத்தன்மை அற்றதாக இல்லாமல், தனித்த அதிகாரம் கொண்ட ஓர் அமைப்பாக, வெளிப்படைத்தன்மை கொண்ட ஒன்றாக, பல்வேறு அமைப்புகளாகக் கல்வித் துறையின் பல்வேறு அங்கங்கள் மாறுவது கல்வித் துறைக்கு நாம் செய்யும் மிகப் பெரிய பேறாக இருக்கும். தனியார் பள்ளிகளையும், அரசுப் பள்ளிகளையும் ஒருசேர, ஒரே மாதிரியாகக் கட்டுப்படுத்துவது என்பதுதான் சரியானதாக இருக்கும். அதை நாம் அனைவருமே வரவேற்க வேண்டும்.

உயர் கல்வியைப் பொறுத்தமட்டில், பல்கலைக்கழகங்களின் நோக்கம் மாற்றியமைக்கப்படுகிறது. அனைத்துக் கல்லூரிகளும் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளாக மாற வேண்டும். பல்கலைக்கழகம் என்பது ஆராய்ச்சியையும் கல்வியையும் நோக்கமாகக் கொண்டதாக ஆக வேண்டும். இதுவும் மிக அடிப்படையான, வரவேற்கப்பட வேண்டிய மாற்றம். ஆனால், மத்தியில் ஒரேயொரு கட்டுப்பாட்டு நிறுவனம்தான் நாட்டின் உயர் கல்வியை முழுமையாகக் கட்டுப்படுத்தும் என்பது சரியானதாக இல்லை. அந்த அளவுக்கு மையப்படுத்துதல் என்பது மிகவும் கெடுதலாகக்கூட முடியலாம். எந்த அளவுக்குத் தன்னாட்சி அதிகாரம், எந்த அளவுக்குக் கட்டுப்பாடு என்பதில்தான் இதன் வெற்றி இருக்கப்போகிறது.

**- A.N. சேதுரமன்**

# முட்டாள் ராஜாக்கள்

ஒரு பக்க சிறுகதை

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு மூட நம்பிக்கையோடு வாழ்ந்து வந்தார். காலையில் அவர் யார் முகத்தைப் பார்த்து விழிக்கிறாரோ அவரின் அதிர்ஷ்டத்தை பொறுத்தே அந்த நாள் அமையும் எனக் கண் மூடித் தனமாக நம்பினார். அந்த நாள் இனிய நாளாக அமையவில்லை என்றால் காலையில் யார் முகத்தில் விழித்தாரோ அவரை நாடு கடத்தி விடுவார்.

எப்பொழுதும் தான் அதிர்ஷ்டம் கொண்டவர் எனத் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்து விழிப்பதே வழக்கம். எனினும் சில பொழுதுகளில் எவரேனும் மாட்டிக்கொள்வதுண்டு.

அந்த நாட்டிலிருந்து கடல் தாண்டி ஒரு சின்னத் தீவு இருக்கும். அந்தத் தீவுக்குத் தான் அதிர்ஷ்டம் இல்லாதவர்களை நாடு கடத்துவது வழக்கம். அங்குப் பல மிருகங்கள் சுற்றி திரியும். அவை நாடு கடத்த பட்ட மனிதர்களை உணவாகத் தின்று விடும்.

எந்தத் தவறும் செய்யாமல் ராஜாவின் மூட நம்பிக்கையால் இறந்தவர்கள் பலர். இப்படியே நாட்களோட அந்த நாட்டிற்கு வேலை தேடி ஒரு இளைஞன் வந்தான். ராஜாவைப் பார்க்க வேண்டுமென ஆவலோடு அரண்மனை வாயிலில் இரவு முதல் காத்திருந்தான்.

காலை விடிந்தது காவலர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர். 'காவலளிகளே! காவலாளிகளே! என் கண்ணாடி எங்கே?' என்று ராஜாவின் குரல் கேட்டது. காவலாளிகள் பணியில் ஈடுபட்டிருக்க ராஜாவுக்கு உதவி செய்து நற்பெயருடன் வேலையை வாங்கி விடுவோம் என்று மனதினுள் யோசித்தான். ஊருக்குப் புதிது என்பதால் அவனுக்கு ராஜாவின் மூடநம்பிக்கைபற்றி ஒன்றும் தெரியாது.

ராஜா ' கண்ணாடி எங்கே? ' என்று கண்ணை மூடிக்கொண்டே குரல் கொடுக்க உள்ளே சென்றான் இளைஞன். கண்ணாடியைத் தேடி 'இந்தக் கண்ணாடியா பாருங்கள் ராஜா?' என மரியாதையோடு கண்ணாடியைக் கையில் கொடுக்க முற்பட்டான்.

குரல் புதுமையாக இருக்க 'யார் அது?' என்று கூறியபடி கண்ணைத் திறந்தார் ராஜா. எதிரில் இளைஞன் இருப்பதை கண்டு கோவத்தோடு,' யார் நீ? இங்கு என்ன செய்கிறாய்? ' எனக் கேட்டார்.

இளைஞன்,'ராஜா, நான் வேலை தேடி தங்களை காண வந்துள்ளேன். உங்கள் குரல் கேட்டவுடன் உதவிட அறையினுள்ளே வந்தேன்' என ஒன்றும் அரியாதவனாய் விழித்தான். 'நீ என் முன் தோன்றியதால் உன் முகத்தைக் கண்டு கண்விழித்து விட்டேன். இன்றைய நாள் சிறப்பாக அமையாவிடில் உனக்குத் தண்டனை நிச்சயம்' எனக் கோவத்தோடு வெளியே சென்றார்.

ராஜாவின் மூட நம்பிக்கை பற்றியும் தண்டனையாகத் தீவிற்கு நாடு கடத்தப்படுவதை பற்றியும் காவலாளிகள் மூலம் கேட்டு அறிந்தான்.

இன்றைய நாள் ராஜாவிற்கு சிறப்பாக அமைய வேண்டும் எனக் கடவுளை வேண்டிக் கொண்டான். ஆனால், அவனது நேரம் சரியாக இல்லை. வெளியே போன ராஜாவிற்கு கல் இடித்துக் காலில் ரத்தம் வந்துவிட்டது. முடிந்தது அவன் கதை என்று அனைவரும் அச்சுறுத்த, செய்வது அறியாது திகைத்து நின்றான். பயந்தது போலவே அனைத்தும் நடக்க தொடங்கியது. அவனைக் குற்றவாளியென அறிவித்து நாடு கடத்த ஏற்பாடுங்கள் தயார் ஆகியது.

ஆனால் அவன் தன் மீது கொண்ட நம்பிக்கையை இழக்கவில்லை. தைரியத்தை வர வைத்தக்கொண்டு, 'ராஜா, உங்கள் கொள்கையை அறியாமல் உங்கள் முன்னே வந்துவிட்டேன் என்னை மன்னித்து விடுங்கள். நான் பிழைப்பு தேடி இங்கு வந்தவன். என் ஆசையை நிறைவேற்றாமல் ஊருக்கு வந்த விருந்தினரைத் தண்டித்தால், உங்கள் நாட்டுக்கு இழுக்கு வந்துவிடும். என்னைத் தண்டிக்கும் முன் என் கடைசி ஆசையை நிறைவேற்றுங்கள்' எனப் பணிவுடன் கேட்டான்.

அவன் கூறுவதும் சரியென ராஜாவிற்கு தோன்றியது. 'உன் கடைசி ஆசை என்ன? நான் நிச்சயம் நிறைவேற்றுகிறேன்' வாக்குக் கொடுத்து விட்டார் ராஜா.

மனதிற்குள்ளே நிம்மதி அடைந்த இளைஞன் அதை வெளிகாட்டிக் கொள்ளாமல், 'எனக்குச் சிறு வயது முதலே ராஜாவாக வேண்டுமென்று ஆசை. தாங்கள் அனுமத்தித்தால் ஒரு மாதத்திற்கு நான் ராஜாவாக இருக்க ஆசைப்படுகிறேன் '.

மனதினுள்ளே கோபம் எழுந்தாலும் வாக்கு கொடுத்து விட்டதனால்,' சரி, இன்று முதல் ஒரு மாதத்திற்கு நீயே ராஜா!' ஆணையிட்டார். மகிழ்ச்சியாகப் பதவி ஏற்றுக் கொண்டான் அந்த இளைஞன்.

நாட்கள் உருண்டு ஓடின, ஒரு மாதம் முடிந்தது. ராஜா மீண்டும் அரசபைக்கு வந்தார். 'உனது தண்டனை இன்று நிறைவேற்றப்படும். காவலாளிகளே! இவனைத் தீவிற்கு கடத்த தயாராகுங்கள்' என ஆணையிட்டார்.

அந்த இளைஞன் அழுது கதறாமல் சிரித்துகொண்டே புறப்பட்டான். ராஜாவிற்கு ஒரே குழப்பம். அவனைத் தீவிற்கு கடத்தியப் பின் ராஜாவிற்கு விஷயம் தெரியவந்தது.

அந்த இளைஞன் ராஜாவாக இருந்த வேளையில் அந்தத் தீவில் பாதுகாப்பான ஒரு அரண்மனை கட்டிகொண்டதும் உணவிற்கு குறைபாடு வராத அளவிற்கு பயிர்களை அங்கு விளைத்துள்ளதையும் வேலைக்கு அங்குப் பலரை பணியில் அமர்த்தியிருப்பதும் தெரியவந்தது.

- M. நிவேதிதா

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.


"ஆரோக்கிய சேது"
கைப்பேசி செயலி
Aarogya Setu
நீங்கள் செய்ய வேண்டியது. இந்த செயலியை (App) உங்கள் மொபைலில் பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.
ப்ளூடூத், ஜிபிஎஸ்ஸை (Bluetooth, GPS) ஆன் செய்யுங்கள்.
லொக்கேஷன் (Location) என்ற இடத்தில் ஆல்வேஸ் (Always) என்பதைத் தேர்வு செய்யுங்கள்.
நீங்கள் எதிர்பாராமல் சமீபத்தில் தொடர்பு கொண்ட யாருக்கேனும் கோவிட் - 19 பாதிப்பு உறுதி செய்யப்பட்டிருந்தால், உங்களுக்கு அலெர்ட் (Alert) அனுப்பப்படும்.
ஒருவேளை உங்களுக்கு நோயின் அறிகுறிகள் இருந்தால், நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், சரியான தனிமைப்படுத்தும் வழிகளையும், விளக்கங்களையும் உங்களுக்கு அலெர்ட்டுடன் தெரிவிக்கப்படும்.
கொரோனா பற்றிய
எச்சரிக்கை நமது கையில்...
குரல்வழிச் சேவை INTERACTIVE VOICE RESPONSE SYSTEM 94999 12345
D DPH H
App Store
Google Play
Aarogya Setu Mobile App
NHM_TN NHM Tamil Nadu Mediacell National Health Mission #StopCoronaTN
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Posted at EGMORE RMS / 1 (Patrika Channel). **AUGUST - 2020**
RNI No.: **TNTAM44870/2012**. Registered No.: **TN/CC(S)DN/461/19-21**, Posted Date of Publication 15th of Every Month


# APPLE PRINTERS






*We Can Do any Printing Job*

**BROCHURES - MAGAZINE - BOOKS - BUSINESS CARDS**
**ID CARDS - CREATE LOGO - ENVELOPES - CATALOGS**
**STICKERS - GRAPHICS ELEMENTS AND ANYTHING**

# 7/13, PONMANACHEMMAL STREET,
M.G.R NAGAR, CHENNAI - 600 078.
93821 33334, 044 - 4861 5321
appleprintersam@gmail.com